இயந்திர நண்டுகள்

எஸ்.பி. கிருஷ்ணன்

இயந்திர நண்முகன்

சோவியத் விஞ்ஞான
கற்பனை இலக்கிய எழுத்தாளர்
அனத்தோலிய் திநெப்ரோவ்
எழுதியது

தமிழில்: எஸ். வி. ஜெ.

உருவாக்கியவரின் உயிரைப் பறித்த
இயந்திர நுண்ணுர்கள் பரிணாம சுவையான
விஞ்ஞானக் கற்பனை.

கண்ணன் நிலையம்
17, பெரிண்டநாயகம் லேன்,
யாழ்ப்பாணம்.

நூலின் பெயர் : இயந்திர நண்டுகள் (மொழிபெயர்ப்புக் கதைகள்)
முதற்பதிப்பு : டிசெம்பர் 2003
உரிமை : எஸ். பி. கிருஷ்ணன்
விலை : ரூபா அறுபது
அச்சுப்பதிப்பு : ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

உள்ளே...

1. இயந்திர நண்டுகள்
2. கத்தியின்றி இரத்தமின்றி
3. சப்பாத்துப்பிழை
4. அன்பான நரியாரே
5. தம்பிக்கு

ஆசிரியரின் பிற நூல்கள்

- ஒன்றே தெய்வம் (சிறுகதைகள்)
- பொழுதுபோக்கு (சிறுகதைகள்)
- பொற்கிழி (நாடகம்)
- வல்லவரும் நல்லவரும் (கட்டுரைகள்)
- இந்துசமுத்திரத்தில் ஓர் இரவுப் பயணம்(சிறுகதைகள்)
  (சேலம் கே. ஆர். ஜி. என். ஆர். அறக்கட்டளையின் இலக்கியப் பரிசு பெற்றது)

ஆசிரியரின் புனை பெயர்கள்: எஸ். பி. கே., கண்ணன், வளவன், வேரற்கேணியன்

அணிந்துரை

எழுத்தாளர்கள் ஏன் எழுதுகிறார்கள் என்று கேட்டால் ஆளுக் கொரு காரணம் சொல்லக்கூடும்.

உண்மை என்னவென்றால், அவர்களால் எழுதாமலிருக்க முடிவதில்லை. அதனால் தான் எழுதுகிறார்கள்.

தங்கள் மனதைத் தொட்டுவிட்ட ஒரு நிகழ்வைப் பார்த்தாலோ, கேட்டாலோ அல்லது படித்தாலோ அதுபற்றிய தங்கள் எண்ணக் கருத்தை எழுத்தில் வடித்தால்தான் அவர்களுக்கு மன நிறைவு ஏற்படும்.

ஆதிகாலத்து வள்ளுவன், இளங்கோ, கம்பன் முதற்கொண்டு இன்றைய 'வரதர்' வரை இதுதான் வழக்கம்

அதனால்தான் பல நல்ல இலக்கியங்கள் வாசகர்களுக்குக் கிடைக் கின்றன.

நல்ல இலக்கியங்கள் படிப்பதற்குச் சுவையாக இருப்பதோடு, வாசகர் களின் மனத்தில் ஒரு சிறிதளவேனும் நல்ல முற்போக்குச் சிந்தனையையும் விதைக்கின்றன.

ஈழத்து எழுத்தாளர்களின் ஆக்கங்கள் பெரும்பாலும் நல்ல இலக்கியங் களாகவே அமைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

அன்பர் என். பி. கிருஷ்ணன் அவர்கள் ஈழத்து எழுத்தாளர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறார் என்று சொல்லாம்.

இலக்கியத்தின்மீது அவருக்குள்ள கட்டுக்கடங்காத ஆவலும், நூல்களை வாசிப்பதிலுள்ள பேராசையும், தொடர்ந்து எழுதிவரும் பயிற்சியும் அவரை இன்று ஒரு சிறந்த எழுத்தாளராகத் தூக்கி நிறுத்தியுள்ளன.

அவரது வளர்ச்சி தொடர்கிறது. தொடர்வதற்கு எனது வாழ்த்துக்கள்.

"இயந்திர நண்டுகள்" என்ற இந்தக் கதை நான் நடத்திய "அறிவுக் களஞ்சியம்" சஞ்சிகையில் தொடர்கதையாக வெளிவந்தது. அப்போது இக்கதையைப் பலரும் மிகப் பாராட்டியதும் நினைவுக்கு வருகிறது.

இது ஒரு விஞ்ஞானக் கற்பனைக் கதை. கற்பனையேயானாலும், உண்மையில் நடக்கக்கூடியதென நம்பத்தக்க உரை.

அணுகுண்டும் ஒரு விஞ்ஞானக் கண்டுபிடிப்புத்தான். அதைப்போல ஒரு பயங்கரமான ஆபத்தான கண்டுபிடிப்புத்தான் "இயந்திர நண்டும்" · இதைப் படிப்பவர்களுக்கு இத்தகைய அழிவுப் பாதைக்கு விஞ்ஞானத்தின் வளர்ச்சி உதவக்கூடாது என்ற ஒரு சிந்தனை பிறக்கும்.

வரவேற்கப்படவேண்டிய சிந்தனை.

84/3, மானிப்பாய் சாலை,
யாழ்ப்பாணம்.

- வரதர்
(சாகித்திய இரத்தினம், தி. ச. வரதராசன்)

என்னுரை

இடம்பெயர்ந்து ஊர் ஊராய் நகர்ந்த காலம்.

என் புத்தகங்களை பெட்டியில் வைத்துக் கட்டி இடம்பெயர விரும்பாத அயல்வீட்டாரிடம் 'பத்திரமாக' வைத்திருக்கக் கொடுத்துவிட்டுப் போய், ஏழாண்டுகளுக்குப் பின் திரும்பி வந்து புத்தகங்கள் எங்கே? என்று கேட்ட போது, "அதெல்லாம் செல் விழுந்து எரிஞ்சு மழையிலும் நனைஞ்சு... ஒன்றுமே உருப்படியா எடுக்கேலாமல் போச்சு..." என்றார் அவர்.

நான் எழுதிய சிறுகதைத் தொகுப்புகள் இரண்டு கட்டுரைத் தொகுப்பு ஒன்று, நாடகநூல் ஒன்றும் சேர்த்து சில படிகள், பிற உட்பட நானூறுவரை அருமையான புத்தகங்கள், சஞ்சிகைகள், 'இயந்திர நண்டுகள்' தொடர்ந்து வெளிவந்த அறிவியல் களஞ்சியம் இதழ்கள் உட்பட, எல்லாம் இழந்தேன். இழக்கமுடியாத கவலை. இப்படி எத்தனை இழப்புக்கள் இந்தத் தமிழனுக்கு!

இயந்திர நண்டுகள் எஸ். பி. கே. என்ற புனை பெயரில் அறிவியல் களஞ்சியத்தில் எழுதப்பட்ட காலத்தில் பல பாராட்டுக்கள் வந்தன. இதனைப் புத்தகமாக வெளியிட வேண்டும் என்று சில நண்பர்கள் ஆலோசனை கூறினர்.

கதை வந்த அ.க. இதழ்களை எங்கே எடுக்கலாம் என்று விசாரித்த வேளை புத்தகங்களை சேகரிப்பதில் சிறப்பிடம் வகிக்கும் 'புத்தொளியின்' ஞாபகம் வந்தது. என் எதிர்பார்ப்பு வீணாகவில்லை.

'புத்தொளி' அ.க. சஞ்சிகைகளை சேர்த்துக் கட்டிய புத்தகத்தைத் தந்து "கவனமாகத் திருப்பித்தாருங்கள்" என்றார். எடுத்து வந்து இயந்திர நண்டுகளைப் படம் பிடித்துக் கொண்டு, திருப்பிக் கொடுத்தேன்.

இயந்திர நண்டுகள் உயிர்பெற்று உங்கள் கைகளில் ஊர்கின்றன. கவனம்! உருவாக்கிய விஞ்ஞானியின் உயிர் பறித்த இயந்திர நண்டு! இந்தக் கற்பனை மெய்மையானால் உலகில் போர் ஆயுதங்களே இருக்கா!

கத்தியின்றி இரத்தமின்றி... என்ற அறிவியல் சித்திரத்தையும் பிற இரு பிறமொழிக் கதைகளையும் சேர்த்துள்ளேன். சிறுவர் தொட்டு உயர் வகுப்பு மாணவர் வரை இவற்றை வாசிப்பதால் பயனடைவர் என்ற நம்பிக்கையுண்டு.

தம்பிக்கு என்ற சிறுகதை என் சொந்தப் படைப்பு. மாணவர் ஆர்வம் கருதி இதனையும் சேர்த்துள்ளேன். நன்றி - அட்டைப்படமும், அடுத்த சித்திரத்துக்குப் பொருத்தமான சித்திரமும் வரைந்தளித்த 'ரமணி' அவர்களுக்கு. நன்றி - அணிந்துரை வழங்கிய பெருமதிப்புக்குரிய சாகித்தியரத்தினம் 'வரதர்' அவர்களுக்கும், இயந்திர நண்டுகளைப் பிடித்துக் கொடுத்து உதவிய 'புத்தொளி' அவர்களுக்கும், அட்டை அச்சிட்டு உவந்தளித்த 'குரு' அமைப்பினருக்கும், புத்தகம் உருவாக்கித் தந்த 'ஆனந்தா அச்சகத்தினருக்கும்' நன்றி.

- ஆசிரியர் -

"ஓ... அதைக் கவனமாக இறக்குங்கள்" என்று மாலுமிகளை நோக்கிச் சத்தமிட்டான் கூக்கிளிங்கு.

மாலுமிகள் இடுப்பளவு தண்ணீரில் நின்று, சிறிய அரப்பெட்டி ஒன்றை படகின் விளிம்புமேல் வைத்து நகர்த்த முயன்றுகொண் டிருந்தனர்.

பொறி இயலாளன் கூக்ளிங்கு அத்தீவுக்கு கொண்டு வந்திருந் தவற்றில் கடைசிப் பெட்டி அது.

கைக்குட்டையால் தன் கழுத்தைத் துடைத்துக் கொண்டே "வெப்பமோ வெப்பம், நெருப்புப் போலல்லவா பொசுக்கு கிறது" என்று முனகிய கூக்ளிங்கு, வியர்வையால் நனைந்த சட்டையைக் கழற்றி மணலில் எறிந்துவிட்டு, "உடைகளைக் களையுங்கள் பாத், இங்கே நாகரீகத்தின் வாடை கூடக் கிடையாது" என்றான்.

கரையிலிருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவில் அலைகள் மேல் அசைந்து ஆடிக்கொண்டிருந்த கப்பலை நான் சோர்வுடன் நோக்கினேன். இருபது நாள்களுக்குப் பின் அது எங்களை ஏற்றிச் செல்ல மீண்டும் வரும்.

"வெயில் எறிக்கும் இந்த நரகத்துக்கு உங்கள் இயந்திரங்களுடன் ஏன் வந்தேனோ, இந்த வெயிலில் பொசுங்குவதற்கா?" என்று உடை களைந்தவாறே கூக்ளிங்கிடம் சொன்னேன்.

"அட அது ஒன்றும் பிரமாதம் இல்லை. வெயில் நமக்குப் பெரிதும் பயன்படும். இப்போது சரியாக நண்பகல். சூரியன் தலைக்கு நேர் உயரே இருக்கிறது."

"பூமத்திய ரேகையில் எப்போதுமே இப்படித்தான். எல்லாப் பூகோளப் பாடப் புத்தகங்களிலும் இது எழுதப்பட்டிருக்கிறதே." என்று "புறா" என்னும் எங்கள் கப்பலில் பதித்த பார்வையை அகற்றாமலே முணுமுணுத்தேன்.

மாலுமிகள், பொறி இயலாளன் அருகே வந்து மௌனமாக நின்றார்கள். அவன் தன் கோட் பைக்கற்றிலிருந்து பண நோட்டுக்களை எடுத்தான்.

சில நோட்டுக்களை அவர்களிடம் நீட்டியபடி "போதுமா?" என்று கேட்டான்.

மாலுமிகளில் ஒருவன் தலையசைத்தான்.

"சரி, நீங்கள் திரும்பலாம். இன்னும் இருபது நாள்களில் உங்களை எதிர்பார்க்கிறேன்."

பாத் பக்கம் திரும்பிய கூக்ளிங்கு "வேலையைத் தொடங்குவோமா?" என்றான்.

"உண்மையைச் சொல்வதானால் நாம் எதற்காக இங்கே வந்திருக்கிறோம் என்பது எனக்குத் தெரியாது. அங்கே கடற்படைத் தலைமையகத்தில் விபரமாகச் சொல்வது உங்களுக்கு சிரமமாக இருந்திருக்கலாம். ஆனால் இப்போது நீங்கள் சொல்லலாம் என்று நினைக்கிறேன்."

கூக்ளிங்கு முகத்தைச் சுளித்து மணலைப் பார்த்தான்.

"தாராளமாகச் சொல்லலாம். நேரம் மட்டும் இருந்திருந்தால் அங்கேயே எல்லாவற்றையும் சொல்லியிருப்பேன்..."

கூக்ளிங்கு தன் சிவந்த கழுத்தை கொழுத்த உள்ளங்கையால் தேய்த்துக் கொண்டு நின்றான்.

பொய் சொல்லத் திட்டமிடுகையில் அவன் இப்படிச் செய்வான் என்பது நான் அறிந்ததே.

"பாத், நாம் செய்யப்போவது ஒரு வேடிக்கையான சோதனை. ஒரு சித்தாந்தத்தை சரிபார்ப்பதற்காக. இந்த இவன் இருக்கிறானே... அட அவன் பெயர் என்ன...?" என்று என்னைக் கேள்விக் குறிப்போடு பார்த்தான்.

"யார் பெயர்?"

"ஆங்கில விஞ்ஞானியின் பெயர்... அட அவன் பெயர் மறந்து விட்டேன்... ஆ ஞாபகம் வந்து விட்டது. சார்ள்ஸ் டார்வின்..."

"கேளுங்கள் கூக்ளிங்கு. நான் மடையன், சார்ள்ஸ் டார்வினை அறிந்திருக்கவில்லை என்று நீங்கள் நினைக்கிறீர்கள் போலிருக்கிறது."

"புளுகியது போதும். கடலுக்கு நடுவில் உள்ள இந்த கொதிக்கும் மணல் தீவில் நாம் எதற்காக சாமான்களுடன் இறங்கியிருக்கிறோம் என்று சொல்லுங்கள். டார்வின் பெயரை எடுக்காதீர்கள்."

கூக்ளிங்கு பொய்ப்பற்கள் நிறைந்த வாயை ஆவெனத் திறந்து உரக்கச் சிரித்தான். சிறிது தூரம் போய் நின்று அவன் கூறினான்.

"ஆனாலும் நீங்கள் வெறும் மக்கு, பாத். நாம் இங்கே சோதனை செய்து பார்க்கப் போவது டார்வின் சித்தாந்தத்தையே தான்."

"இதற்குத்தான் நீங்கள் பத்துப் பெட்டிகள் நிறைய இரும்பை இங்கே எடுத்து வந்திருக்கிறீர்களாக்கும்" என்று அவன் அருகில் போய் நின்று வினாவினேன். அவன் மீது எனக்கு வெறுப்புப் பொங்கிற்று.

"ஆமாம்" என்று சொன்னபோது அவன் முகத்தில் புன்னகை இல்லை.

அவன் தொடர்ந்தான்.

"முதலில் ஒன்றாம் எண் இட்ட பெட்டியைத் திறந்து கூடாரம், குடிநீர், உணவு டப்பாக்கள் ஆகியவற்றையும் மற்றப் பெட்டிகளைத் திறப்பதற்குரிய கருவிகளையும் வெளியில் எடுங்கள் பாத்."

"நல்லது" என்று கூறிவிட்டு முதல் எண் பெட்டியருகே சென்றேன்.

இரண்டு மணி நேரத்தில் கூடாரம் தயாராகிவிட்டது. மண்வெட்டி, சம்மட்டி, கடப்பாரை, உளிகள் ஆகியவற்றை நாங்கள் கூடாரத்திற்குள் வைத்தோம். உணவுப்பண்டங்கள் அடங்கிய சுமார்

நூறு டப்பாக்களையும் குடிநீர் கலன்களையும் வரிசையில் அடுக்கினோம்.

தலைவன் என்ற தகுநிலை பாராமல் கூக்ளிங்கு வியர்வை சிந்த உழைத்தான். சோதனை தொடங்கிற்று.

சூரியன் தொடுவானுக்கு அப்பால் மறைந்து விட்டதை வேலை மும்முரத்தில் நாங்கள் கவனிக்கவில்லை.

மாலைச் சாப்பாட்டின்பின் இரண்டாம் எண் பொறித்த பெட்டியைத் திறந்தோம். இரட்டைச் சில்லு தள்ளுவண்டி ஒன்று அதில் இருந்தது.

நான் மூன்றாவது பெட்டியின் பக்கம் போனேன். ஆனால் கூக்ளிங்கு என்னைத் தடுத்தான்.

"முதலில் வரைபடத்தைப் பார்ப்போம். மற்றச் சாமான்களை வெவ்வேறு இடத்துக்கு எடுத்துச் செல்லவேண்டியிருக்கும்" என்றான்.

நான் வியப்புடன் அவனைப் பார்த்தேன்.

"சோதனைக்கு அப்படிச் செய்வது அவசியம்" என்றான் அவன்.

அந்தத் தீவு கவிழ்ந்த தாம்பாளம் போல வட்டமாக இருந்தது. வடக்கே நாங்கள் இறங்கிய இடத்தில் சிறு குடா அமைந்திருந்தது. அதனைச் சுற்றி மணல் விளிம்பு கட்டியிருந்தது. வெப்பத்தால் வாடிய குட்டைப் புதர்கள் அங்கே காட்சியளித்தன.

தீவின் விட்டம் மூன்று கிலோ மீற்றர் இருக்கும்.

வரைபடத்தில் சிவப்புப் பென்சிலால் மணற்கரையை ஒட்டினாற் போலவும் உட்பகுதியிலும் சில குறிப்புக்கள் இடப்பட்டிருந்தன.

"இப்போது நாம் திறக்கும் பொருள்களை இதோ இந்த இடங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும்" என்றான் கூக்ளிங்கு.

"இவை என்ன அளக்கும் கருவிகளா?"

"இல்லை" என்றவாறு ஹி ஹி ஹி என இளித்தான் பொறியியலாளன். தனக்குத் தெரிந்ததை மற்றவன் அறியாவிட்டால் இப்படி இளிக்கும் பழக்கம் அவனுக்கு உண்டு.

மூன்றாவது பெட்டி பயங்கரமாகக் கனத்தது. முதல் பலகையை அகற்றியதும் அதிர்ச்சியடைந்தேன். வெவ்வேறு அளவு களிலும் வடிவங்களிலும் உலோகப் பாளங்களும், உலோகத் துண்டுகளும் வெளியே சரிந்தன.

முழுவதையும் சரித்துக் கொட்டிவிட்டு, "நாம் சதுரங்க விளையாட்டு ஆடப்போகிறோம் போலிருக்கே" என்றேன்.

"அதற்கு வாய்ப்பில்லை" என்ற கூக்ளிங்கு அடுத்த பெட்டியைத் திறக்கலானான்.

ஒன்பதாவது வரை எல்லாப் பெட்டிகளிலும் உலோகத் துண்டுகள் நிறைந்திருந்தன. சாம்பல், சிவப்பு, வெள்ளி நிறங்களுடைய அவை பெரும்பாலும் செப்பாலும் துத்தநாகத்தாலும் ஆனவை என்று நான் எளிதில் புரிந்து கொண்டேன்.

பத்தாவது பெட்டியை நான் திறக்க முற்பட்டபோது கூக்ளிங்கு சொன்னான்:

"உலோகத் துண்டுகளை தீவின் வெவ்வேறு இடங்களுக்கு கொண்டு சேர்த்தபின் இதனைத் திறப்போம்."

அவற்றைக் கைவண்டியில் ஏற்றி, அடுத்த மூன்று நாள்களிலும், தீவின் பல பகுதிகளுக்குக் கொண்டு சேர்த்தோம்.

அவற்றை சிறு சிறு குவியல்களாக வைத்தோம். சிலவற்றை மண் தோண்டிப் புதைத்தோம். சில குவியல்களில் எல்லா வகை உலோகத் துண்டுகளும் இருந்தன. மற்ற குவியல்களில் ஒரே வகைத் துண்டுகளே இருந்தன.

இந்த வேலை முடிந்தபின் எங்கள் கூடாரத்துக்குத் திரும்பிப் பத்தாவது பெட்டியை அணுகினோம்.

"திறவுங்கள் ஆனால் மிகக் கவனமாக" என்று உத்தரவிட்டான் கூக்ளிங்கு.

இந்தப் பெட்டி மிகச் சிறிதாகவும் லேசாகவும் இருந்தது. அதில் மரத்தூள் அழுத்தப்பட்டிருந்தது. மெழுகு தாளில் சுற்றப்பட்ட ஒரு பொட்டலம் நடுவில் இருந்தது.

அது ஒரு விசித்திரமான இயந்திரம். நண்டு வடிவத்தில் செய்யப்பட்ட பெரிய உலோக விளையாட்டுக் கருவிபோல் தோன்றியது.

கணுக்கள் உள்ள பெரிய ஆறு கால்களும் முன்புறம் நுண்மையான இரு சோடி உணர் கொம்புகளும் அதற்கு இருந்தன. நண்டின் முதுகின் மேல் உட்புறத்தில் உலோகத்திலான பரவளைவுக் கண்ணாடி ஒளிர்ந்தது. அதன் நடுவில் கடுஞ்சிவப்புப் படிகம் இருந்தது. சாதாரண நண்டு போலன்றி இதற்கு முன்னும் பின்னும் இரண்டு சோடிக் கண்கள் இருந்தன.

நான் அதனை உற்றுப் பார்த்தபடி நிற்க, "பிடித்திருக்கிறதா?" என்று நீண்ட அமைதிக்குப் பின் கேட்டான் கூக்ளிங்கு.

"நாம் இவற்றை வைத்து விளையாடப் போகிறோம் என்று தோன்றுகிறது" என்றேன்.

"இது அபாயம் நிறைந்த விளையாட்டுக் கருவி. இதைத் தூக்கி மணல் மேல் வையுங்கள்" என்றான் கூக்ளிங்கு.

நண்டு லேசாய் இருந்தது. மூன்று கிலோவுக்கு மேல் போகாது.

"ம்... அடுத்து என்ன...?" என்று கிண்டலாகக் கேட்டேன்.

"கொஞ்சம் பொறுங்கள். இதற்குச் சூடு பிடிக்கட்டும்" என்றான்.

இரண்டு நிமிடங்களில் அதன் முதுகின் கண்ணாடி சூரியனின் பக்கம் திரும்பியதைக் கண்டேன்.

"ஓகோ, இது உயிர்ப்பு அடைவது போல் இருக்கிறதே" என்று கூவி எழுந்து நின்றேன்.

நான் எழுந்ததும் என் நிழல் தற்செயலாக இயந்திரத்தின் மேல் விழுந்தது. உடனே நண்டு தத்திச் சென்று வெயிலில் நின்றது. நான் திடுக்கிட்டு தாவிக் குதித்தேன்.

"எப்படி இருக்கிறது விளையாட்டுக்கருவி? பயந்து விட்டீர்களே" என்று கொக்கரித்தான் கூக்ளிங்கு.

நான் நெற்றியில் வியர்வையைத் துடைத்துக் கொண்டேன்.

"ஆண்டவன் பெயரால் கேட்கிறேன் கூக்ளிங்கு, சொல்லுங்கள், இதை வைத்துக் கொண்டு நாம் என்ன செய்யப் போகிறோம்? எதற்காக நாம் இங்கே வந்திருக்கிறோம்?" என்று கேட்டேன்.

அவன் எழுந்து என்னருகில் வந்து ஆழ்ந்த குரலில் சொன்னான்:

"டார்வின் சித்தாந்தத்தைச் சரிபார்ப்பதற்காக!"

"ஆனால்... அது உயிரியல் சித்தாந்தம் ஆயிற்றே. இயற்கைத் தேர்வையும் பரிணாமத்தையும் பிறவற்றையும் பற்றிய சித்தாந்தம் அல்லவா அது?" என்று நான் முணுமுணுத்தேன்.

"அதுவேதான். அதோ பாருங்கள். எங்கள் நண்டார் தண்ணீர் குடிக்கப் போகிறார்."

இயந்திர நண்டு கரைக்கு ஊர்ந்து போய் உறுஞ்சு குழலை விட்டு நீரை உள் இழுத்தது. நீர் பருகி முடிந்ததும் திரும்பி வெயிலுக்கு வந்து அசையாமல் நின்றது.

சிறிது நேரம் மௌனமாக இருந்தபின், "நீங்கள் தான் இதை திட்டமிட்டு உருவாக்கினீர்களா?" என்று கூக்ளிங்கிட்ம் கேட்டேன்.

ம்... ம்... ம்... என்றபடி மணலில் கால் நீட்டிப் படுத்தான் அவன்.

நானும் படுத்து அந்த விந்தைப் பொறியை நிலைக் குத்திட்டு நோக்கினேன்.

அதன் அடித்தளத்தில் விழிகளை ஒத்த இரண்டிரண்டு துளைகள் இருந்தன. துளைகளின் உள்ளே படிகங்கள் ஒளிர்ந்ததால் அவை விழிகள் என்ற எண்ணம் வலுப்பட்டது. நண்டின் உடலுக்கு அடியில் தட்டையான மேடை - வயிறு - தெரிந்தது. மேடையின் மட்டத்துக்கு சிறிது மேலே மூன்று சோடி பெரியவையும் இரண்டு சோடி சிறியவையும் ஆன கணுக்கள் உள்ள இடுக்கிகள் வெளியே நீண்டிருந்தன.

நண்டின் உட்புறத்தைப் பார்க்க வாய்க்கவில்லை.

கடற்படைத் தலைமையகம் இந்த விளையாட்டுக் கருவியை இவ்வளவு செலவில் தனிக் கப்பலில் இந்தத் தீவுக்கு அனுப்பி வைத்தது ஏன் என சிந்திக்கலானேன்.

இருவரும் அவரவர் எண்ணங்களில் ஆழ்ந்தவர்களாக மணலில் வெகு நேரம் படுத்திருந்தோம். சூரியன் மேற்கே தொடுவானை நெருங்கியது. தொலைவில் வளர்ந்திருந்த புதர்களின் நிழல் நண்டின் மேல் பட்டது. அது நகர்ந்துபோய் வெயிலில் நின்றது. நிழல் சிறிது நேரத்தில் அங்கேயும் விழுந்தது. அப்போது நண்டு மேலும் நகர்ந்து வெயிலை நாடிச் சென்றது.

நாங்கள் எழுந்து மெதுவாக பொறியின் பின்னே நடந்தோம். இவ்வாறு படிப்படியாகத் தீவைச் சுற்றிவந்து அதன் மேற்குப் பகுதியை அடைந்தோம்.

அங்கே கரையில் குவிந்து கிடந்த உலோகத் துண்டுகளிடம் விரைந்த நண்டு ஒரு செப்புத் துண்டின் அருகில் அசையாது நின்றது.

கூக்ளிங்கு என் கையைப் பிடித்து "இப்போது கூடாரத்துக்குப் போவோம். சுவையான நிகழ்ச்சிகளை நாளைக் காலையில் பார்க்கலாம்" என்றான்.

கூடாரத்தில் நாங்கள் மௌனமாக இருந்து சாப்பிட்டோம். பின்பு மடக்குக் கட்டிலை விரித்துப் படுத்தோம்.

மறுநாள் காலையில் நான் கடலில் குளிக்கப் போனேன். நீர் வெதுவெதுப்பாக இருந்தது. நெடுநேரம் நீந்தி அலைகளுடன் விளையாடிவிட்டு திரும்பிக் கூடாரத்துக்குப் போனபோது இராணுவப் பொறியியலாளன் கூக்ளிங்கு அங்கே இல்லை.

நான் அன்னாசிப்பழ டப்பாவைத் திறந்து கொண்டே "தன் இயந்திர் அவலட்சணத்தைக் கண்டுகளிக்கப் போயிருக்கிறான் போலும்" என எண்ணிக் கொண்டேன்.

மூன்று பழத் துண்டுகளை விழுங்கிய பின் பொறியியலாளனின் குரல் கேட்டது.

"லெப்டினன்ட்.... ஓடி வாருங்கள்... இங்கே உடனே ஓடி வாருங்கள்... தொடங்கிவிட்டது"

நான் கூடாரத்தை விட்டு வெளியே வந்தேன்.

"வாருங்கள்... நம் அழகுப் பொறியை நேற்று விட்டு வந்தோமே... அங்கே போவோம்..."

எதிரே இரண்டு நண்டுகள் நின்றன. அவை, நாம் பெட்டியிலிருந்து எடுத்த நண்டுபோலவே இருந்தன.

கூக்ளிங்கு கைகளைத் தேய்த்தபடி இளித்தான்.

"அட இந்த இளிப்பை விடுங்களேன்... இந்த நண்டுகள் எங்கிருந்து வந்தன சொல்லுங்கள்"

"பிறந்தது! இந்த இரவில் பிறந்தது!"

நான் ஒரு வார்த்தை பேசாமல் நண்டுகளின் அருகே போனேன். அவற்றின் முதுகுக்கு மேல் எழுந்த மெல்லிய புகைத் தாரைகள் காற்றில் கலந்தன. அவற்றின் உணர் கொம்புகள் உலோகத் துண்டுகள் மீது பட்டதும் அவற்றின் மேல் மின்பற்றாசு (Welding) வைக்கப்படுகையில் ஏற்படுவது போன்று மின் வில் ஏற்பட்டது.

இவ்வாறு உலோகத் துண்டுகள் உருக்கப்பட்டன. உருகிய உலோகத்தை நண்டுகள் மளமளவென்று தங்கள் அகன்ற வாய்களுக்குள் செலுத்திக் கொண்டன. சிறிது நேரத்தில் மற்றொரு சோடி நண்டு வெளியே வந்தது.

நான் திகைத்துப் போனேன்.

"இந்த விலங்குகள் தங்களைப் போன்றவற்றை தாமே தயாரிக்கின்றனவே!" என்று வியப்புடன் கூறினேன்.

"சரி... இந்தப் பொறியின் ஒரே வேலை தன் போன்றவற்றை தயாரிப்பதுதான்" என்றான் கூக்ளிங்கு.

"இது நடக்கக் கூடியதுதானா?" என்று கேட்டேன் ஒன்றும் விளங்காமால்.

"ஏன் இல்லை, எந்த இயந்திரமும், உதாரணமாகக் கடைச்சல் இயந்திரம், தன்னையே போன்ற கடைச்சல் இயந்திரத் துக்கு தேவையான பகுதிகளைத் தயாரிக்கிறதே!"

என் மூளையில் உதித்த ஒரு கருத்து: தன்னையே திரும்பத் தயாரிக்கும் தானியங்கிப் பொறியை நிரூபிப்பது என்ற கருத்து இந்த நண்டு.

நான் சிந்தனையில் ஆழ்ந்தேன். அவ்வேளை மற்றொரு நண்டு தயாராகிவிட்டது. அது கால்களை மணலில் ஊன்றி நின்றது. அதன் முதுகுக் கண்ணாடி வெயிலின் பக்கம் திரும்பியது. சிறிது நேரம் நின்றபின் இறங்கிப் போய் நீர் பருகியது. பின் ஊர்ந்து வந்து வெயில் காய்ந்தது.

இந்தப் புதுப்பிறப்பை நான் பார்வையிட்டு முடிப்பதற்குள் "இதோ அடுத்தது தயாராகிவிட்டது" என்று சத்தமிட்டான் கூக்ளிங்கு.

நான் அதைத் திரும்பிப் பார்த்தேன்.

அதேவேளை முதல் இரண்டு நண்டுகளும், எதுவுமே நடக்காதது போல், உலோகக் குவியலின் பக்கத்தில் நின்று துண்டுகளை உருக்கி உள்ளே செலுத்தும் வேலையில் முனைந்தன.

மற்றொரு நண்டு கடல்நீரைக் குடிக்கச் சென்றது.

"எந்த இழவுக்காக இவை நீரை உறிஞ்சுகின்றன" என்று கேட்டேன்.

"மின் சேமக்கலன்களுக்கு இவ்வாறு நீர் ஊற்றப்படுகிறது. வெயில் விழும்வரை சூரிய வெப்பத்தின் ஆற்றல் நண்டின் முதுகு மேலுள்ள கண்ணாடி, சிலிக்கன் மின்கலம், இவற்றின் உதவியால் மின் ஆற்றலாக மாற்றப்படுகிறது. இரவில், தானியங்கிப் பொறி பகலில் மின் சேமக்கலத்தில் சேமிக்கப்பட்ட ஆற்றலால் வேலை செய்கிறது."

"அப்படியானால் இந்த இயந்திர விலங்குகள் பகலும் இரவும் தொடர்ந்து வேலை செய்கின்றனவா?"

"அப்படித்தான்"

ஒரு நண்டு அசைந்தது. உலோகக் குவியலுக்கு ஊர்ந்து சென்றது. மற்றொன்று சூரிய ஆற்றலை ஏற்றிக் கொண்டிருந்தது.

"ஆனால், சிலிக்கன் மின்கலத்துக்கு வேண்டிய பொருள் இந்த உலோகக் குவியலில் இல்லையே" என்று கேட்டேன்.

"அது தேவையும் இல்லை. அது போதியளவு இங்கேயே இருக்கிறதே" என்று காலால் மணலை வாரித் தெளித்த கூக்ளிங்கு "மணல் என்பது சிலிக்கன் ஒக்ஸைட்தானே. நண்டின் உள்ளே மின் வில்களின் செயல்பாட்டால் இது தூய சிலிக்கனாக மாற்றப் படுகிறது" என்றான்.

மாலையில் கூடாரத்துக்குத் திரும்பினோம்.

மாலைச் சாப்பாட்டின் போது "இவையெல்லாம் எதற்காக" என்று கேட்டேன்.

"யுத்தத்துக்காக. இந்த நண்டுகள் மறைமுக அழிவுக் கருவிகள்" என்றான் அவன்.

"எனக்குப் புரியவில்லை" என்றேன்.

அவித்த இறைச்சித் துண்டை சுவைத்துக் கொண்டே பதில் சொன்னான் கூக்ளிங்கு:

"இந்த மாதிரி தானியங்கிகள் பகைவனின் பிரதேசத்தில் மறைமுகமாக இறக்கப்பட்டால் என்ன நடக்கும் என்று எண்ணிப் பாருங்கள்."

"என்ன நடக்கும்?" என்று சாப்பிடுவதை நிறுத்திவிட்டுக் கேட்டேன்.

"பெருக்கல் விருத்தி பற்றித் தெரியுமா?"

"தெரியும் என்று வைத்துக் கொண்டால்?"

"நேற்று நாம் ஒரு நண்டிலிருந்து தொடங்கினோம். இப்போ அதன் எண்ணிக்கை எட்டு ஆகிவிட்டது. இன்னும் பத்து நாட்களில் ஒரு கோடிக்கு மேல் போய்விடும்"

"ஆனால்..."

"இந்த நண்டுகள் பகைவனின் எல்லா உலோகச் சேமிப்பையும் சீரணித்துவிடும். பகைவனின் டாங்கிகளும் பீரங்கிகளும் விமானங்களும் இயந்திரங்களும் பொறிகளும் பகைப் பிரதேசத்திலுள்ள எல்லா உலோகங்களும் இவற்றுக்கு இரையாகி அழிந்துவிடும். ஒரு மாத காலத்தில் உலகின் எந்த மூலையிலும் ஒரு துண்டு உலோகம் கூட எஞ்சியிராது. இந்த நண்டுகள் போர்க் காலத்தில் முக்கியமான யுத்த சாதனம்..."

"சரிதான்... ஆனால் பகைவனின் பிரதேசத்தில் உள்ள உலோகத்தை எல்லாம் தின்று தீர்த்ததும் இவை சொந்தப் பிரதேசத்திற்குள் ஊர்ந்து வந்துவிடுமே."

"தானியங்கிகளின் குறியீடுகளை நாம் அறிந்திருக்கிறோம். ஆதலால் அவை எமது பிரதேசத்திற்கு வந்ததும் வேலையை நிறுத்திவிடலாம். இதனால் இன்னொரு லாபமும் உருவாகும். எங்கள் பகைவரின் எல்லா உலோகச் சேமிப்புக்களையும் எங்கள் பக்கம் கொண்டு வந்துவிடலாம்."

அன்று இரவு பயங்கரமான கனவு கண்டேன். உலோக நண்டுகள் படைபடையாக எம்மேல் ஊர்ந்தன. அவை உணர் கொம்புகளைச் சிலுப்பின; மெல்லிய புகைத்தாரைகள் அலையென எழுந்தன.

நான்கு நாட்களில் தானியங்கிப் பொறிகள் தீவு முழுவதிலும் ஊர்ந்து கொண்டிருந்தன.

கூக்ளிங்கின் கணக்குப்படி இப்போது அவற்றின் தொகை நாலாயிரத்துக்கும் அதிகமாய் இருந்தது.

வெயிலில் அவற்றின் உடல்கள் மின்னியபடி எங்கும் காணப்பட்டன. ஒரு குவியல் உலோகம் முடிந்ததும் அவை சுற்றித் திரிந்து புதிய உலோகக் குவியலைக் கண்டுபிடித்தன.

ஐந்தாம் நாள் சூரியன் மறைவதற்கு முன் நான் ஒரு பயங்கரக் காட்சியைக் கண்டேன். இரண்டு நண்டுகள் ஒரு துத்த நாகத் துண்டுக்காக போராடின.

தீவின் தென் பகுதியில் சில துத்தநாகத் துண்டுகளை நாங்கள் புதைத் திருந்தோம். வெவ்வேறு இடங்களில் வேலை செய்து கொண்டிருந்த நண்டுகள் அடிக்கடி இங்கே ஓடி வந்தன. ஒரு முறை துத்தநாகத் துண்டுகள் இருந்த குழிக்குள் சுமார் இருபது நண்டுகள் ஒரே சமயத்தில் வந்துவிட்டன. அங்கே சரியான நெரிசல். பொறிகள் ஒன்றுடன் ஒன்று மோதின. உயரமும் வலிமையும் கூடிய ஒரு நண்டு தன் உடன் பிறப்புக்களை இடித்து விலக்கி, கிடங்கின் அடியில் இருந்த உலோகத் துண்டை எட்டி எடுக்க முயன்றது. ஆனால் அதே உலோகத் துண்டை மற்றொரு நண்டு தன் இடுக்கிகளால் பற்றிக் கொண்டது. இரு பொறிகளும் அந்த உலோகத் துண்டை இரு திசைகளிலும் இழுத்தன. அதிகத் துடிப்பானதாக தோன்றிய நண்டு உலோகத் துண்டை பிடிங்கிக் கொண்டது. ஆயினும் இரையை விட்டுவிட போட்டியாளி இணங்கவில்லை. அது பின்னால் ஓடி எதிராளி மேல் அமர்ந்து அதன் வாய்க்குள் தன் உணர் கொம்புகளை விட்டது.

இரண்டு தானியங்கிகளின் உணர் கொம்புகளும் பின்னிக் கொண்டன. அவை பயங்கர வலிமையுடன் ஒன்றை ஒன்று கிழித்து பிய்க்கத் தொடங்கின.

சூழ இருந்த பொறிகள் எதுவும் இதைப் பொருட்படுத்த வில்லை. இந்த இரண்டும் பயங்கரப் போராட்டத்தில் ஈடுபட்டன. மேலே இருந்த நண்டுப் பொறி திடீரென மல்லாந்து விழுந்துவிட்டது. அதன் எதிராளி மின்பொறிகளால் பகை இயந்திரத்தின் உடலைப் பட்டையாக பிய்க்கத் தொடங்கியது. இரையின் உடல் இரண்டுகளாகப் பிளந்து விழுந்தது. வெற்றியாளி அதன் நெம்பு கோல்களையும் பல் சக்கரங்களையும் கம்பிகளையும் பிய்த்து இரைவாக வாய்க்குள் திணித்துக் கொண்டது.

சில நிமிடங்களில் மணலில் விழுந்தது புதிய ஒரு நண்டுப் பொறி.

நான் கண்டவற்றை கூக்ளிங்கிடம் கூறியபோது அவன் மெல்லச் சிரித்தான்.

"இது தான் வேண்டியதும்" என்றான்.

"இந்த வகையில் போனால் இவை ஒன்றை ஒன்று தின்று தீர்த்துவிடுமே"

"நீங்கள் சொல்வது சரி. அதன் விளைவாக முற்றிலும் தீறமையானவை எஞ்சி நிற்கும்."

அன்றிரவு நான் கூடாரத்துக்கு முன்னால் மணலில் அமர்ந்து கடலைப் பார்த்தபடி புகை பிடித்துக் கொண்டிருந்தேன்.

"மனித குலத்துக்கு தீங்குகள் விளைவிக்கும் காரியத்தை கூக்ளிங்கு திட்டமிட்டிருக்கிறானா? உலகில் உள்ள உலோகங்கள்

அனைத்தையும் தின்று தீர்க்கவல்ல பயங்கர கொள்ளை நோயை, கடல் நடுவில் எங்கோ கிடக்கும் இந்த சிறுதீவில் நாங்கள் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோமா?"

நான் எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில் சில உலோக விலங்குகள் என்னருகில் ஓடி வந்தன. அவற்றின் இயந்திரங்கள் கிரீச்சிட்டன. ஒன்று என்மீது மோதியது. அதை உதைத்துத் தள்ளினேன். அது புரண்டு விழுந்தது. மறுகணம் வேறு இரண்டு நண்டுகள் அதைத் தாக்கின. கண்களைக் கூசச் செய்யும் மின் பொறிகள் இருளில் மின்னலாயின.

பலமிழந்து மல்லாந்து விழுந்த நண்டு மின் பொறிகளால் துண்டுகளாக ஆக்கப்பட்டது. நான் பொறுமையை இழந்தேன். கூடாரத்திற்குள் ஓடிப்போய் பெட்டியிலிருந்து கடப்பாரையை எடுத்தேன். கூக்ளிங்கு அங்கே குறட்டை விட்டுக்கொண்டிருந்தான்.

நண்டுப் பொறிகள் குழுமியிருந்த இடத்துக்கு மெல்லச் சென்று அவற்றில் ஒன்றை ஓங்கி அடித்தேன். மற்றவை மிரண்டு ஓடிவிடும் என நான் நினைத்தபடி நடக்கவில்லை. நான் உடைத்துத் தகர்த்த நண்டை மற்றவை தாக்கின. மீண்டும் மின் பொறிகள் படர்ந்தன.

மீண்டும் தாக்கினேன். அப்போது எழுந்த மின்பொறி களுடன் மேலும் சில நண்டுகள் இங்கே ஓடிவந்தன. அவற்றில் பெரிதாகத் தெரிந்த பொறி ஒன்றைக் குறி வைத்துத் தாக்கினேன். என் கடப்பாரை அதன் முதுகில் பட்டதும் நான் கூச்சலிட்டு தூரத்தே விழுந்தேன். கடப்பாரை வழியாக மின்னோட்டம் என் உடலில் ஏறிவிட்டது.

சிறிது நேரம் கழித்து நடுங்கும் உடலுடன் கடப்பாரையை எடுப்பதற்காக நண்டுகளை நெருங்கினேன். இருட்டில் மின் வில்களின் ஒளியில், என் கடப்பாரை துண்டுகளாகக் கிடந்தது கண்டேன்.

கூடாரம் திரும்பிக் கட்டிலில் படுத்தேன். சிறிது நேரம் ஆழ்ந்து தூங்கினேன். திடீரென நான் திடுக்கிட்டு விழித்துக் கொண்டேன். குளிர்ந்து கனத்த ஏதோ ஒன்று என் உடம்பில் ஊர்வதை உணர்ந்தேன். துள்ளி எழுந்தேன்; அது கூடாரத்துக்கு உள்ளே மறைந்து விட்டது. சில வினாடிகளில் மின் பொறிகள் தெரிந்தன.

பாழாய்ப்போன நண்டு, உலோகத்தைத் தேடி நேரே எங்களிடமே வந்துவிட்டது. அதன் மின்வாய், குடிநீர் இருந்த தகரப் பாத்திரத்தை வெட்டியது.

நான் கூக்ளிங்கை தட்டி எழுப்பி நடந்தவற்றைத் தெரிவித்தேன்.

"எல்லா டப்பாக்களையும் கடலுக்குக் கொண்டு போங்கள். உணவுப் பண்டங்களையும் குடிநீரையும் கடலில் கொண்டு சேருங்கள்" என்று அவன் உத்தரவிட்டான்.

தகர டப்பாக்களையும் மற்றும் கருவிகளையும் எடுத்துப் போய் கடலில் இடுப்பளவு நீரில் மணலில் வைத்தோம்.

இந்த வேலைக்குப் பிறகு சோர்ந்து போய் கடற்கரையில் அமர்ந்து காலைவரை உறக்கமின்றி கழித்தோம். கூக்ளிங்குமீது எனக்கு வெறுப்பு மேலிட்டது.

நாங்கள் தீவுக்கு வந்து எத்தனை நாள் ஆயின என்பது நினைவில்லை.

ஒரு நாள் கூக்ளிங்கு வெற்றிக் குரலில் "உலோகங்கள் எல்லாம் தின்று தீர்க்கப்பட்டுவிட்டன. மிகவும் தேவையான நிகழ்ச்சிகள் இனிமேல்தான் தொடங்கும்" என்றான்.

எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்தபோது அது உண்மையே எனப்பட்டது. ஒரு உலோகத் துண்டுமே மிஞ்சவில்லை.

அவை பொறிகளாக மாறி தீவு எங்கும் சுற்றித் திரிந்தன. புதர்களுக்கு இடையிலும் ஊர்ந்தன. ஒன்றன்மேல் ஒன்றும் அடிக்கடி எங்கள் மேலும் மோதிக்கொண்டன.

அவற்றைக் கூர்ந்து பார்த்தபோது கூக்ளிங்கு சொன்னது சரியே என்பது எனக்கு உறுதிப்பட்டது. நண்டுப் பொறிகள் உண்மையில் வெவ்வேறாய் இருந்தன. அவற்றின் உள் அமைப்பில் இன்னும் ஆழ்ந்த வேறுபாடுகள் இருக்கும் என்று தோன்றியது.

"நல்லது நாம் போரைத் தொடங்கி வைக்க நேரம் வந்து விட்டது." என்றான் கூக்ளிங்கு.

நான் அதிர்ச்சியடைந்து அவனைப் பார்த்தேன்.

"மெய்யாகவேதான், இவற்றிற்கு கோபோல்ற் கொடுக்க வேண்டும். மிகச் சிறிதளவு கோபோல்ற் உள்ளே போனால் போதும், ஒன்றுக்கு ஒன்று மரியாதை காட்டுவதை - அப்படிச் சொல்லலாம் என்றால் - நிறுத்திவிடும். அந்த வகையில் இவற்றின் இயந்திர அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது."

மறுநாள் காலை நாங்கள் கடல் சேமிப்பிடம் சென்றோம். கடலிலிருந்து உணவுப்பண்ட டப்பாக்களையும் குடிநீர்ப் பாத்திரங் களையும் சாம்பல் நிறமான கனத்த கோபோல்ற் பாளங்களையும் எடுத்துப் போனோம்.

கோபோல்ற் பாளங்களை உயரத் தூக்கியவாறு கூக்ளிங்கு நீரிலிருந்து மணலுக்கு வந்தபோது பல நண்டுகள் அவனைச் சூழ்ந்து மொய்த்தன. நான் தூரத்தே நின்றுவிட்டேன். சில நண்டுகள் தத்தக்க பித்தக்கவென்று துள்ள முயன்றதைக் கண்டேன்.

"இயக்கங்களில் வேறுபாடு இருப்பதைப் பார்த்தீர்களா? நாம் இவற்றுக்குள் மூட்டிவிடப்போகும் போரில் வலிமை மிக்கதே நிலைத்திருக்கும்" என்று கூறிவிட்டு கூக்ளிங்கு கோபோல்ற் பாளங்களை ஒன்றின் பின் ஒன்றாகப் புதர்களின் பக்கம் எறிந்தான்.

பல நண்டுகள் ஒரே சமயத்தில் கோபோல்ற் பாளங்கள் மீது பாய்ந்தன. ஒன்றை ஒன்று இடித்து விலக்கியபடி அவை மின் பொறிகளால் பாளங்களைத் துண்டாக்கின. சில ஒரு பாளத்தைக் கைப்பற்றும் ஆர்வத்தில் கூட்டாளிகளின் முதுகுகளில் ஏறி ஊர்ந்தன.

"முதற்சண்டை இதோ தொடங்கிவிட்டது" என்று மகிழ்ச்சியுடன் கைகொட்டினான் கூக்ளிங்கு. சில நிமிடங்களில் அந்த இடம் பயங்கரமான போர்க்களமாக மாறிவிட்டது. மேலும் பல தானியங்கிகள் விரைந்து வந்தன.

இயந்திரங்களின் வெட்டுண்ட பகுதிகளையும் கோபோல்ற் நண்டுகளையும் விழுங்கிய புதிய இயந்திரங்கள் வேட்டை விலங்குகளாக மாறி தங்கள் உடன் பிறப்புக்கள் மேல் பாய்ந்தன.

இந்தப் போரின் முதற்கட்டத்தில் கோபோல்றை உட்கொண்ட இயந்திர நண்டுகள் வீரமுடன் போரிட்டன. தீவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் தமக்குத் தேவையான உலோகம் பெறும் நம்பிக்கையுடன் ஓடிவந்த தானியங்கிகளை அவை துண்டுகளாகக் கூறு போட்டன. இந்த நெரிசலின் இடையில் தயாரிக்கப்பட்ட புதிய தானியங்கிகளும் சண்டையில் கலந்து கொண்டன.

இவை வியப்பூட்டும் தலைமுறையைச் சேர்ந்த தானியங்கிகள். அளவில் சிறியவை. ஆனால் முதுகில் இருந்த கண்ணாடி வழக்கமானதை விடப் பெரியவை. இந்தக் கண்ணாடிகளால் பிரகிக்கப்பட்ட சூரிய ஆற்றலே போதியதாக இருந்தது. இவற்றின் வலிந்து தாக்கும் போக்கு பிரமிப்பை உண்டாக்கிற்று. ஒரே

நேரத்தில் அநேக இயந்திர நண்டுகளைத் தாக்கி ஒரே சமயத்தில் இரண்டு மூன்றை மின் பொறிகளால் கூறுபடுத்தின.

கூக்ளிங்கு தண்ணீரில் நின்று கொண்டிருந்தான். அவன் முகத்தில் எல்லையற்ற மனநிறைவு ததும்பியது.

"நல்லது! நல்லது! மேலும் என்ன நடக்கும் என்பதை இப்போதே மனத்திரையில் காண்கிறேன்" என்று கைகளைத் தேய்த்தபடி அவன் கொக்கரித்தான்.

நடுப்பகலுக்குள் எங்கள் கூடாரத்தின் அருகிலிருந்த கடற்கரை முழுவதும் பெரும் போர்க்களமாக மாறிவிட்டது. தீவு முழுவதிலும் இருந்து தானியங்கிகள் இங்கே ஓடிவந்தன. இந்த விந்தைப் போரில் பெருந்தொகையான மின் பொறிகளின் சடசடப்பும் இயந்திர உடல்களின் உலோகக் கிணுகிணுப்பும் ஒலித்தன.

சூரியன் மறையத் தொடங்கியதும் சிறு இயந்திரங்களில் திடீர் மாற்றம் காணப்பட்டது. அவை மேற்குப் பகுதியில் கூடின அவற்றின் இயக்கமும் குறையலாயின.

"அட சைத்தான். இந்தக் கும்பல் எல்லாம் கட்டாயம் அழிந்து போகும். இவை மின்சேமக்கலன்கள் அற்றவை. சூரியன் மறைந்ததுமே இவற்றின் வாழ்வு தீர்ந்துவிடும்" என்று கரகரத்த குரலில் சொன்னான் கூக்ளிங்கு.

மெய்யாகவே புதர்களின் நிழல்கள் சிறு தானியங்கிகளின் கும்பலை மூடும் அளவுக்கு நீண்டதும் அவை அங்கங்கே அசையாது நின்றுவிட்டன. இப்போது தாக்கும் ஆற்றலை இழந்துவிட்டன. உயிரற்ற உலோகச் சேமிப்பு ஆகிவிட்டன.

கிட்டத்தட்ட அரை ஆள் உயரமுள்ள பிரமாண்டமான இயந்திர நண்டுகள் ஊர்ந்து வந்து அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக தின்று தீர்த்தன.

கூக்ளிங்கு முகம் சுழித்தான். இத்தகைய பரிணாமம் அவனுக்குப் பிடிக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது.

பாரிய நண்டுகள் சிறு நண்டுகளை தீர்த்துக்கட்டிக் கொண்டிருக்கையில் கடற்கரையில் தற்காலிக அமைதி நிலவியது.

நான் நீரிலிருந்து வெளியே வந்தேன்.

பொறியியலாளன் மௌனமாக என் பின்னே நடந்தான். நாங்கள் சிறிது இளைப்பாறவென தீவின் கிழக்குப் பகுதிக்குப் போனோம்.

மிகவும் களைத்திருந்த படியால், இருள் படிந்த மிருதுவான மணலில் படுத்த உடனேயே கண்ணயர்ந்துவிட்டேன்.

அபாயக் குரல் கேட்டு நான் நடுநிசியில் விழித்துக் கொண்டேன். நான் துள்ளி எழுந்ததும் மணல் கரையின் சாம்பல் நிறப் பட்டையும் விண்மீன்கள் கண்சிமிட்டும் கரிய வானும் கடலும் தவிர வேறு எதுவும் என் கண்ணில் தென்படவில்லை.

குரல், புதர்கள் இருந்த இடத்திலிருந்து மீண்டும் கேட்டது. ஆனால் முன்னரைவிட தணிவாக.கூக்ளிங்கு என் அருகில் இல்லை என்பதை அப்போதுதான் கவனித்தேன். குரல் வந்ததாகத் தோன்றிய திசையில் பாய்ந்து ஓடினேன்.

கடல் வழமைபோல் அமைதியாய் இருந்தது. சிற்றலைகள் அரிதாகவே மணலில் விழுந்தன. நாங்கள் உணவுப் பண்டங்களையும் குடிநீர்ப் பாத்திரங்களையும் வைத்திருந்த இடத்தில் கடல் அமைதியற்று இருந்தது. அங்கே ஏதோ அமளி தெரிந்தது. கூக்ளிங்கு அங்கே தான் ஏதோ செய்து கொண்டிருக்கிறான் என்று நினைத்தேன்.

நீரடியில் சேமிப்பிடத்தின் பக்கத்தில் போய், "கூக்ளிங்கு இங்கே என்ன செய்கிறீர்கள்?" என்று உரத்த குரலில் கேட்டேன்.

"நான் இங்கே இருக்கிறேன்" என்ற பதில் எங்கோ வலப் புறத்தில் கேட்டது.

"அடக்கடவுளே! எங்கே இருக்கிறீர்கள்?"

"நான்... இங்கே கழுத்தளவு தண்ணீரில் நிற்கிறேன், வாருங்கள்"

நான் நீரில் மேலும் நடந்தேன். கடினமாக ஏதோ ஒன்றில் இடறிக் கொண்டேன். அது பிரமாண்டமான இயந்திர நண்டு.

"நீங்கள் அவ்வளவு ஆழத்துக்கு ஏன் போனீர்கள்? அங்கே என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"அவை என்னை விரட்டிக் கொண்டு வந்து, இதோ இங்கே துரத்திவிட்டன" என்று கீச்சுக் குரலில் முறையிட்டான், பாவி.

"விரட்டிக் கொண்டு வந்தனவா? எவை?"

"நண்டுகள்"

"இருக்கமுடியாது. என்னை அவை விரட்டக் காணோமே"

நான் நீரில் மீண்டும் ஒரு தானியங்கியுடன் மோதிக் கொண்டேன். அதை விட்டு விலகி ஒருவாறு பொறியியலாளன் அருகே போய்ச் சேர்ந்தேன். அவன் களுத்தளவு தண்ணீரில் நின்று கொண்டிருந்தான்.

"சொல்லுங்கள், என்ன நடந்தது?"

அவன் நடுங்கும் குரலில் சொன்னான்.

"நான் தூங்கிக் கொண்டிருந்த போது ஒரு தானியங்கி என்னைத் தாக்கிற்று. அது தற்செயல் என்று நான் நினைத்தேன். நான் ஒரு புறம் விலகினேன். ஆனால் அது திரும்பவும் என்னை நெருங்கி என் முகத்தை தன் இடுக்கியால் தொட்டது... நான் எழுந்து அப்பால் சென்றேன்..... அது என்னைத் தொடர்ந்தது... நான் ஓடினேன்... நண்டு என் பின்னே வந்தது... இன்னொன்றும் அதனுடன் சேர்ந்து கொண்டது. பின்பு வேறொன்று... மேலும் ஒன்று... அவைதான் என்னை இங்கே துரத்திவிட்டன..."

"விந்தை தான், முன்பு இப்படி நடக்கவில்லையே, பரிணாமப் போக்கில் மனித வேற்றுமை இவற்றிற்கு ஏற்பட்டிருந்தால் இவை என்னையும் விட்டு வைத்திருக்க முடியாதே" என்றேன்.

"தெரியவில்லை, கரைக்குப் போகவே பயமாயிருக்கிறது" கூக்ளிங்கின் குரல் கரகரத்தது.

"வாருங்கள் கரையை ஒட்டினாற் போல் கீழ்த் திசையில் நடந்து போவோம். நான் உங்களுக்கு காவலாய் இருக்கிறேன்." என்று சொல்லி அவன் கையைப் பிடித்துக் கொண்டேன்.

"எப்படி..."

"இதோ சேமிப்பிடத்துக்குப் போவோம். நான் ஏதாவது கனத்த சாமானை எடுத்துக் கொள்கிறேன்..."

உலோக விலங்குகள் உணவுப் பொருள் டப்பாக்களைப் பற்றி இழுத்தன. எங்கள் நீரடிச் சேமிப்பிடத்துக்கும் அவை வந்து விட்டன.

"கூக்ளிங்கு! நாம் தொலைந்தோம். இவை எங்கள் உணவுப் பண்ட டப்பாக்களை எல்லாம் தின்றுவிட்டன." என்று சத்தமிட்டேன்.

"அப்படியா? இனி நாம் என்ன செய்வது...?"

"என்ன செய்வது என்று சிந்தியுங்கள். இதெல்லாம் உங்கள் மட்த்தனமான திட்டம் தானே... உங்களுக்குப் பிடித்தமான வகை மறைமுக நாசக்கருவியை நீங்கள் உருவாக்கினீர்கள். இப்போது இந்த அவலத்தை சீர்ப்படுத்துங்கள்.

தானியங்கிக் கும்பலை விட்டு விலகி நடந்து கரையை அடைந்தேன்.

அங்கே இருட்டில் இயந்திர நண்டுகளுக்கு நடுவே தவழ்ந்து, மாமிசத் துண்டுகளையும் பதனிட்ட அன்னாசித் துண்டுகளையும் அப்பிள், வேறு உணவுப் பண்டங்களையும் தடவிச் சேகரித்து மணல் பீடபூமியில் கொண்டு சேர்த்தேன். முழுதாக ஒரு டப்பா கூட எனக்கு அகப்படவில்லை. இந்த வேலையில் நான் மும்முரமாக ஈடுபட்டதால் கூக்ளிங்கு நீரில் இருப்பதையே மறந்து விட்டேன்.

அவன் கூச்சலிட்டான்.

"அடக்கடவுளே! பாத்... உதவி செய்யுங்கள். இவை என்னை நெருங்கப் பார்க்கின்றன."

நான் நீரில் பாய்ந்து இயந்திர நண்டுகள் மேல் இடறி விழுந்து கூக்ளிங்கின் பக்கம் போனேன். அவனுக்கு ஐந்தடி தூரத்தில் மற்றொரு இயந்திர நண்டின் மேல் மோதிக் கொண்டேன். நண்டு என்னைத் தீண்டவே இல்லை.

"அடச் சனியனே! ஏன் தான் இவற்றிற்கு உங்கள் மேல் இவ்வளவு நாட்டமோ? பார்க்கப் போனால் நீங்கள் இவற்றின் தந்தை ஆயிற்றே" என்றேன்.

"நான் அறியேன். இவற்றை விரட்டுவதற்கு ஏதாவது செய்யுங்களேன். இதைவிடப் பெரிய நண்டு பிறந்து விட்டால் நான் ஒழிந்தேன்" என்று கம்மிய குரலில் சொன்னான் கூக்ளிங்கு.

"அழகாய்த்தான் இருக்கிறது பரிணாமத்தின் லட்சணம்... சரி, சொல்லுங்கள் இந்த நண்டுகளின் எந்தப் பகுதியைத் தாக்கினால் சேதமடையும்? இயந்திரத்தை சேதப்படுத்துவது எப்படி?"

"முன்பு பரவளைவுக் கண்ணாடியை அல்லது சேமக் கலத்தை உடைக்க வேண்டியிருந்தது... இப்போது எப்படியோ, அறியேன் தனிப்பட்ட ஆராய்ச்சி இதற்குத் தேவை..."

"நீங்களும் உங்கள் ஆராய்ச்சிகளும் நாசமாய்ப் போக" என்று வெறுப்புடன் சொல்லிவிட்டு நண்டின் மெல்லிய முன் காலை கையால் பிடித்து வளைத்தேன். உணர் கொம்புகள் செப்புக் கம்பி போல எளிதில் வளைந்தன.

உலோக விலங்குக்கு என் செயல் பிடிக்கவில்லை என்று தெரிந்தது. அது நீரிலிருந்து மெல்ல வெளியேறத் தொடங்கியது. நானும் பொறி இயலாளனும் கரையோரமாக மேலே நடந்தோம்.

சூரியன் உதித்ததும் எல்லாத் தானியங்கிகளும் நீரிலிருந்து வெளியே ஊர்ந்து மணல் மேல் வந்து சிறிது நேரம் வெயில் காய்ந்தன. அந்த நேரத்தில் நான் சுமார் ஐம்பது நண்டுகளின் பரவளைவுக் கண்ணாடிகளை உடைத்து விட்டேன். அவை அசைவின்றிக் கிடந்தன.

ஆனால் துர்ப்பாக்கியவசமாக நிலைமை இதனால் சீராக வில்லை. அவை மற்ற இயந்திர விலங்குகளுக்கு இரையாயின. அவற்றிலிருந்து புதிய தானியங்கிகள் வியப்பூட்டும் வேகத்துடன் தயாராகத் தொடங்கின. அவற்றோடு போராட்டம் நடத்தும் உறுதி குலைந்து போயிற்று.

இவ்வளவு நேரமும் கூக்ளிங்கு நீரில் நின்று கொண்டிருந்தான்.

விரைவிலேயே இயந்திர நண்டுகளுக்கிடையில் மீண்டும் போராட்டம் உக்கிரமடைந்தது. அவை பொறியியலாளனை முற்றாக மறந்து விட்டதாகத் தோன்றியது.

சண்டை நடந்த இடத்திலிருந்து அகன்று நாங்கள் தீவின் எதிர்ப்புறம் போனோம். நீண்ட நேரம் கடலில் குளித்ததில் பொறி இயலாளன் வெட வெட என்று நடுங்கினான். அவன் பற்கள் கிடு கிடுத்தன. மணலில் மல்லாந்து படுத்து சுடுமணலை தன்மேல் தூவும்படி கேட்டுக் கொண்டான்.

சிறிது நேரங் கழித்து உடைகளையும் மீதி உணவுப் பண்டங்களையும் எடுத்துப் போவதற்காக முதலில் தங்கியிருந்த இடத்துக்கு நான் திரும்பினேன். கூடாரம் அழிந்து கிடந்தது. தரையில் அடித்துப் புதைக்கப்பட்டிருந்த இரும்பு ஈட்டிகள் மறைந்து விட்டன. தார்ச்சீலை ஓரங்களில் கயிறு இறுக்குவதற்காக இருந்த உலோக வளையங்கள் தின்று ஒழிக்கப்பட்டுவிட்டன.

என் உடைகளும் கூக்ளிங்கின் உடைகளும் தார்ச்சீலைக்கு அடியில் இருந்ததைக் கண்டேன். உடைகளில் இருந்த உலோகக் கொக்கிகள், பொத்தான்கள், பக்கிள்கள் ஆகியனவும் மறைந்துவிட்டன.

இதற்கிடையில் தானியங்கிகளின் போர்க்களம் கரையில் இருந்து தீவின் உட்பகுதிக்கு மாறிவிட்டது.

தீவின் நடுவில் புதர்களுக்கு இடையில் கிட்டத்தட்ட ஆள் உயரமான இடுக்கிகளை ஊன்றிக் கொண்டு சில இயந்திர நண்டுகள் நிற்கக் கண்டேன். அவை இணை இணையாக மெதுவாய் வெவ்வேறு புறங்களில் நகர்ந்து, பின் வேகமாக ஒன்றன் மேல் ஒன்று பாய்ந்தன.

அவை மோதுகையில் உலோகங்கள் அடித்துக் கொள்ளும் ஒலி கிளம்பிற்று. இந்த அரக்க இயந்திரங்களின்

மெதுவான இயக்கத்தில் பெரு வலிமையும் அதிக கனமும் அமைப்பட்டன.

என் கண்ணெதிரே சில இயந்திரங்கள் தரையில் அடித்து இழுத்தப்பட்டன. உடனே அவை துண்டுகளாக்கப்பட்டன. இவை எல்லாம் எனக்குப் பழகிப்போய்விட்டன. எனவே பழைய தங்கிடத்தில் எடுக்க முடிந்தவற்றை எல்லாம் எடுத்துக் கொண்டு கூக்ளிங்கிடம் போனேன். அவன் உறங்கிக் கொண்டிருந்த மணல் மேட்டை நெருங்கிய போது புதர்களின் பின்னாலிருந்து பிரமாண்டமான ஒரு நண்டு தென்பட்டது.

அது என்னைவிட உயரமாக இருந்தது. அதன் கால்கள் மிக நீளமாகவும் பருத்தும் இருந்தன.

'இக்தியோசாரஸ்' (Ichthyosaurus) - அரக்கப் பல்லி - என்று மனதிற்குள் அதற்குப் பெயரிட்டேன்.

அது தரைமீது தத்தக்க பித்தக்க என ஊர்ந்து தரையை நோட்டமிடுவது போல உடலை நாலு பக்கமும் திருப்பிற்று. நான் என்னையறியாமலே கூடாரத் துணியை அதன் பக்கம் வீசி ஆட்டினேன். அது என்னைக் கவனிக்காது வீலாப்பக்கமாக அரை வட்டம் இட்டுத் திரும்பி கூக்ளிங்கு படுத்திருந்த மணல் மேட்டை நெருங்கியது.

அரக்க விலங்கு, பொறியியலாளன் பக்கம் போகிறது என்பதை ஊகித்திருந்தால் உடன் அவனுக்கு உதவ ஓடியிருப்பேன். அது தண்ணீரை நோக்கிச் செல்கிறது என்றே முதலில் தோன்றிற்று. அது தண்ணீரை கால்களால் தொட்டுவிட்டுத் திரும்பி கூக்ளிங்கு இருந்த இடத்துக்கு விரைவாக நகரத் தொடங்கியதுமே நான் சாமான்களை எறிந்துவிட்டு ஓடினேன்.

'இக்தியோசாரஸ்' கூக்ளிங் பக்கத்தில் நின்றது.

அதன் நீண்ட உணர் கொம்புகளின் நுனிகள் மணலில் கூக்ளிங்கின் முகத்தருகே அசையத் தொடங்கியதைக் கண்டேன்.

மறுகணமே மணல் புழுதிப்படலம் திடீரென்று கிளம்பிற்று. அந்தப் புழுதிப்படலம் வான் நோக்கி எழுந்தது.

அதற்குள் நேரம் கடந்துவிட்டது. எதிர்பாராதது நடந்துவிட்டது. அதன் உணர் கொம்புகள் பொறியியலாளனின் கழுத்தைச் சுற்றி இறுக்கி அவனைத் தூக்கி இயந்திரத்தின் வாய்க்குள் கொண்டு போயின. கூக்ளிங்கு கைகளையும் கால்களையும் ஆட்டி உதறியபடி அந்தரத்தில் தொங்கினான்.

கூக்ளிங்கை நான் மனமார வெறுத்தேன். என்றாலும் மூளையற்ற ஏதோ பயங்கர உலோக இயந்திரத்துடன் போராடி அவன் மடியக்கூடாது.

நண்டின் உயரமான இடுக்கிகளைப் பற்றி முழுப்பலத்துடன் இழுத்தேன். ஆனால் அது அசையவே இல்லை. நான் அதன் முதுகுமேல் பாய்ந்து ஏறினேன். கணப்பொழுதில் என் முகம் கூக்ளிங்கின் விகாரமான முகத்தின் மட்டத்தில் இருந்தது. அவன் முடிவுக்கு அவன் பற்கள் தான் காரணம் என்று பட்டது. கூக்ளிங்கு எஃகுப் பற்கள் கட்டிக் கொண்டிருக்கிறானே!

வெயிலில் பளிச்சிட்ட பரவளைவுக் கண்ணாடியை முழுப் பலமும் சேர்த்து ஓங்கிக் குத்தினேன்.

இயந்திர நண்டு ஒரே இடத்தில் சுழலத் தொடங்கியது. கூக்ளிங்கின் நீலம் பாரித்த முகம் தொழிற்கூட வாயின் மட்டத்துக்கு வந்தது. அப்போது மின்பொறிகள் கூக்ளிங்கின் நெற்றிமேல் பாய்ந்தன. அடுத்து நண்டின் உணர் கொம்புகள் தளர்ந்தன. உலோகக் கொள்ளை நோயை தோற்றுவித்தவனின் உடல் உணர் வின்றிப் பொத்தென மணலில் விழுந்தது.

நான் கூக்ளிங்கை அடக்கம் செய்த போது சில பிரமாண்டமான நண்டுகள் ஒன்றை ஒன்று துரத்தியபடி திரிந்தன. ஆனால் அவை என்னையோ இராணுவப் பொறியியலாளனின் உடலையோ எட்சியம் செய்யவில்லை.

கூக்ளிங்கின் உடலை தார்ச்சீலையால் (கூடாரச் சீலை) சுற்றி தீவின் நடுவில் ஆழமற்ற மணல் பள்ளத்தில் அடக்கம் செய்தேன். அப்போது எனக்கு சிறிதும் கவலை ஏற்படவில்லை. என் வரண்ட வாயில், மணல் கரகரத்தது. இந்த அசிங்கம் பிடித்த திட்டத்திற்காக இறந்த பொறியியலாளனை நான் மனதிற்குள் சபித்தேன். கிறிஸ்தவ ஒழுக்க நெறியின் நோக்கில் பார்த்தால் நான் செய்தது தவறுதான்.

"புறா" என்ற எங்கள் கப்பல் வரவேண்டிய திசையில் தொடுவானைப் பார்த்தபடி மணிக்கணக்காக கடற்கரையில் வீழ்ந்து கிடந்தேன். நேரம் மெல்லவே நகர்ந்து என்னைச் சித்திர வதை செய்தது. இரக்கமற்ற கொடுஞ்சூரியன் என் தலைக்கு மேல் அசையாது நின்றுவிட்டது போல் தோன்றியது. தவழ்ந்து நீருக்குள் சென்று என் காய்ந்த முகத்தை நனைத்துக் கொண்டேன்.

"இந்தக் காலத்தில் சில அறிவுள்ள மனிதர்கள் மற்ற மனிதர்களுக்கு கேடு விளைவிக்கும் வகையில் தங்கள் அறிவுத் திறனை செலவிடுகிறார்கள். கூக்ளிங்கைப் பொறுத்தவரை அவனுடைய இயந்திர நண்டுகளை நல்ல நோக்கத்துக்காகப் பயன் படுத்தலாம் என்று நம்பினேன். உதாரணமாக உலோகம் எடுப்பதற்கு அவற்றைப் பயன்படுத்தலாம்..."

கரையில் கிடக்கும் விந்தைமிகு இயந்திரம் ஒன்றை கப்பலில் ஏற்ற வேண்டுமா என்று கப்டன் என்னிடம் கேட்டபோது தற்போது அவசியம் இல்லை என்று சொல்லிவிட்டேன்.

கத்தியின்றி இரத்தமின்றி.....

அழைப்பு மணியை அமத்தினேன். கதவு திறந்தது. நோயாளி படுக்கையிலிருந்தபடி "வாருங்கள்" என்றார். கட்டிலுடன் இணைத்திருந்த றேடியோவில் கை வைத்து சுவிட்சை நிறுத்தினார். மற்றொரு பட்டனை அமத்தினார். அவருடைய தலைப்பக்கம் உயர்ந்தது; என்னுடன் உரையாட வசதியாக.

கட்டில் அமைப்பு மட்டுமல்ல, விநோதம். படுத்தபடியே யன்னலைத் திறக்கவும் லைற் சுவிட்ச் போடவும், றேடியோ இயக்க வசதிகள் இருந்தன.

அடுத்த அறையில் இருந்த மருத்துவப் பேராசிரியர் புன் சிரிப்புடன் என்னை வரவேற்றார். ஒரு பெண் நீண்ட வெள்ளை மேலங்கியுடன் காணப்பட்டாள். அவள் எதிரே பல தொலைக்காட்சித் திரைகள் தெரிந்தன. ஆச்சரியம் மேலிட பேச்சின்றி நின்ற என்னைப் பார்த்து பேராசிரியர் சொன்னார்:

"அவர்தான் கடமையில் இருக்கும் டொக்ரர். அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளைக் கண்காணித்து ஒரு தாதியை அல்லது டொக்ரரை எந்த வேளையிலும் அந்த நோயாளியிடம் அனுப்புவார்."

மின்னியல் வெப்பமானிகளும் நாடிமானிகளும் நோயாளியின் வெப்பநிலையையும் நாடித்துடிப்பையும் பதிவு செய்தன. இந்தக் கருவிகளைவிட நோயைக் கண்டுபிடிக்கும் கருவிகள், அடுத்த அறையில், மேலும் வியப்பூட்டின.

நோயாளியின் வெற்று உடலில் பரந்து கிடக்கும் வயர் களையும் அவை இணைக்கப்பட்டிருக்கும் ஒலி பெருக்கியையும் காட்டி "அதுதான் ஸ்தெதஸ்கோப்" என்றார் பேராசிரியர். டொக்ரர்கள் வழக்கமாக அணியும் - காதிலும் கழுத்திலும்

தொங்கும் ஸ்தெதஸ்கோப் - கருவி எந்த டொக்ரர் கழுத்திலும் காணப்படவில்லை.

"றேடியோ ஸ்தெதஸ்கோப்..." பேராசிரியர் விளக்க மளித்தார்.

ஒலிபெருக்கி "கிரீச் கிரீச்" ஒலியை வெளியிட்டது. அவை இருதயத்திலிருந்து இரத்தம் 'பம்ப்' ஆகும் ஒலி. இசைக்கருவியின் நாதத்தை நுணுக்கமாகச் செவிமடுக்கும் இசைமேன்தையைப் போன்று டொக்ரர் நரம்புகளின் ஒவ்வொரு அசைவையும் கவனித் திருந்தார்.

நான் நாற்புறமும் கண்களை ஓட்டினேன்.

பின் சுவரில் இருந்த கண்ணாடிப் பேழையில் 'டயக்னாசிஸ்' பளிச்சிட்டது.

"தயவு செய்து எலக்ரானிக் கம்ப்யூற்றரை இயக்கிவிடுங்கள்" நோயின் தன்மைகளை ஆய்ந்தறியும் டொக்ரரைப் பார்த்துச் சொன்னார், பேராசிரியர்.

டொக்ரர் துரிதமாகச் செயற்பட்டார்.

நோயாளியை சோபா போன்ற படுக்கைக்கு மாற்றினார். அது மனித உடலைத் தன்னுள் அடக்கிக் கொண்டது. கை, கால், கழுத்து ஆகியவற்றை வயர்கள் இணைத்துக் கொண்டன. மேசையில் மின்குமிழ்கள் பல வண்ண ஒளி காட்டின. நோயாளியின் நாடி, சுவாசம், இரத்த அழுத்தம், ஏற்கனவே எலக் ரானிக் கருவியில் தரப்பட்ட இரத்தப் பரிசோதனைகளின் பெறுபேறுகள் யாவையும் கம்ப்யூற்றர் தன் சிந்தனைக்கு எடுத்தது.

முடிவு எதிர்பாராத ஒன்று.

ஒரே வேளையில் மூன்று நோய்களின் பெயர்களை அபூர்வமான, லத்தீன் சொற்களில் வெளியிட்டது.

அதன் விளக்கம்: "ஆயிரக்கணக்கான ஏதுக்களை நிராகரித்தேன். கொடுக்கப்பட்ட அறிகுறிகளில் இந்த மூன்று ஒரே மாதிரியான நோய்களில் அடங்கியுள்ளன. இதைவிட வேறெதையும் என்னால் செய்ய முடியாது. இவற்றிலிருந்து ஒன்றைத் தீர்மானிக்க வேண்டியது உங்கள் பொறுப்பு."

"றேடியோ லொக்கேற்றரை ஒன் பண்ணுங்கள்..." வழி காட்டி, டொக்ரருக்கு ஆலோசனை சொன்னார்.

திரையில், இருதயம், ஈரல், வயிறு, குடல் ஆகியவற்றின் வெளிக்கோடுகள் தோன்றின. உறுப்புக்கள் இருக்கும் இடங்கள் தெரிந்தன. ஒவ்வொரு உறுப்பினதும் தொழிற்பாட்டை றேடியோ லொக்கேற்றர் வெளிப்படுத்தியது.

முன்னாளில் நீண்ட நாள்கள் எடுத்த முயற்சி. இன்று ஒரு நோய் இருப்பதை டொக்ரர் பத்து நிமிடங்களில் கண்டுபிடித்தார்.

★ ★ ★

"சத்திர சிகிச்சை அறையைப் பார்ப்போமா?"

பேராசிரியர் என்னை அடுத்த அறைக்கு அழைத்துப் போனார்.

"சேர்... நீங்கள் என்னை எங்கே அழைத்து வந்தீர்கள்? இங்கே சத்திரசிகிச்சைக்கு ஒரு மேசை கூட இல்லையே? மின்னியல் சாதனங்கள் தானே உள்ளன... இங்கே...?" என்று கேட்டேன்.

சோபாவில் ஒரு நோயாளி. அவரைத் தொடுவது போல் ஒரு கருவி. டொக்ரர் இல்லை. கத்தி இல்லை. இரத்தம் படிந்த

பஞ்சு, பன்டேஜ்... எதுவுமில்லை.

பேராசிரியர் என் கவனத்தைத் தன்பால் திருப்பினார்.

"இது ஈரல் சத்திரசிகிச்சை. ஈரலில் இருந்து கற்கள் அகற்றப்பட்டன..."

என் கண்கள் அங்குமிங்கும் பார்த்தன.

"என்ன பார்க்கிறீர்கள்..."

"அதிசயம் சேர் ஈரலிலிருந்து கற்கள் எடுப்பது... அதுவும் நோயாளியைக் கையினால், கத்தியினால் தொடாமலே... தொழில்நுட்பக் கற்பனையினால் மட்டும்..."

"விளக்கமாகச் சொல்வதானால், இருபது நிமிடங்களில் ஒலிக்கதிர்கள் கற்களை மிருதுவான மணலாக்கிவிடும். இந்த மணல் சில நாட்களில் கழிவுகளுடன் சேர்ந்து வெளியேறிவிடும்..."

"ஆனால்... அல்ராசொனிக் கற்களை நொருக்கும் போது ஈரலின் மென்மையான ரிசுக்கள் பழுதாகிவிடாதா? கல் தூள் சில வேளை உடலின் உள் உறுப்புக்களின் உள்ளே மிக ஆழமாகப் போய்விட்டால்... இதை நினைத்துப் பார்த்தால்..."

"ஓ... பாருங்கள்..." என விழித்தார் பேராசிரியர்.

"கத்தி வைக்காமலே ஒரு நோயாளியைச் சுகப்படுத்துவது சுலபம். ஒரு சிறந்த சத்திரசிகிச்சை அப்படித்தான் இருக்க வேண்டும். இன்று, நாங்கள் சத்தமற்ற ஒலியின் சக்தியை மிகப் பரவலாகப் பயன்படுத்துகிறோம். எங்கள் நிலையத்தில் பற்களை எப்படித் துப்புரவு செய்கிறோம் என்று பாருங்கள். கண்ணுக்குப் புலப்படாத துளைக்கருவியினால். இது எலும்பு நோய்களைச் சுகப்படுத்தும் கருவி. கதிர் இயக்கக் கருவிகள் முன்னரும் பயன்

படுத்தப்பட்டனதான். ஆனால் இவ்வளவு பரந்த அளவில் அல்ல. சரி... இப்போ, மற்றொரு சத்திரசிகிச்சை அறையைப் பார்ப்போமா?"

"சப்பாத்தைக் கழற்றி வைத்துவிட்டு, இந்த ஸ்பெசல் சிலிப்பரை அணிந்து கொள்ளுங்கள்" என்றார். துல்லிய முகமூடி ஒன்று தந்து அணியச் சொன்னார். "வாருங்கள்" என்று அழைத்துப் போனார்.

அங்கே இருபதாம் நூற்றாண்டு நடுப்பகுதிக்குரிய அறிவியல் அமைப்பில் ஒரு சத்திரசிகிச்சை அறையைப் பார்த்தேன். சத்திரசிகிச்சை மேசை நவீன வசதிகளுடன் மாற்றம் பெற்றிருந்தது. சக்கரங்களை சுழற்றி உயர்த்தும், தாழ்த்தும் வேலை இல்லை. பட்டன்களை அமத்தும் வேலை மட்டுமே. மின் ஒளி சைகைகள் முற்றாக மாற்றமடைந்துள்ளன. அவை அறைக்கு வெளிச்ச மூட்டுவன மட்டுமல்ல, நோய்க் கிருமிகளையும் கொன்றுவிடுவன. அறை, ஒரு துரும்பும் இல்லாது, துப்புரவாகவும் குளிரூட்டப் பட்டதாகவும் இருந்தது.

டொக்ரரின் எதிரே இருக்கும் திரையைப் பார்த்தேன்; அது எதற்கு என்று கேட்பது போல.

பேராசிரியர் சொன்னார்:

"இது ஒரு சாதாரண ரி.வி. செற் அல்ல. இது எக்ஸ்ரே இயந்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எக்ஸ்ரே படம் இருள் பின்னணியில் மட்டுமே பார்க்கமுடியும். ஆனால், நாங்கள் அதனை ஒளியூட்டும் ரி.வி. திரைக்கு மாற்றியுள்ளோம். பாருங்கள், ஒரு கூரிய ஆணி குழந்தையின் வயிற்றில். குழந்தை விளையாடும் போது அதை விழுங்கிவிட்டது. சத்திரசிகிச்சை தொடங்கும் போது டொக்ரர் சரியாக வழிநடத்தப்படுவார். திரையில் தனது கைகளைப் பார்ப்பார். வெட்டவேண்டிய இடத்தைப் பார்ப்பார். ஆனால் அவருக்குக் கத்தி தேவைப்படாது."

"கத்தியில்லாமல் எப்படி வெட்டுவதாம்...?"

"ஏன்... ஓ... நான் சொல்லிவிட்டேனே... பழைய சத்திரசிகிச்சை முறைகளை நாங்கள் மறந்துவிட்டோம், என்று..."

மின்னியல் கருவியிலிருந்து "ம்.ம்.ம்.ம்..." என மெல்லிய குரல் கேட்டது. குழந்தை மயக்க நிலைக்கு மாறிற்று. சில நிமிடங்கள் சென்றன. டொக்ரர் சொன்னார்:

"நல்லது... நாங்கள் இப்போ சத்தமிட்டுப் பேசலாம்... மெசின் நிறுத்தப்படும்வரை நோயாளி நித்திரையிலிருந்து எழுந்திருக்க மாட்டார். இது ஒரு சிறப்பு உத்தி. வலி பற்றிய உணர்வு இல்லை. குளோரபோம் கொடுத்து நோயாளியை எப்படி சித்திரவதை செய்தோம்... அந்நாளில்... நினைவிருக்கிறதா...? நாங்கள் அவர்களை நித்திரையாக்கினோம்... உண்மை... ஆனால்... சத்திரசிகிச்சையின் பின் அவர்கள் எவ்வளவு பயங்கரமான உணர்வைப் பெற்றனர்... நோயுற்ற பாகத்தை உடலிலிருந்து பிரித்து நரம்புத் தொடரை அறுத்து... ஓ... அப்படியும் செய்திருக்கிறோம்... சரி தொடங்குவோம்..."

பேராசிரியர் பிரதம தாதியைப் பார்த்தார்.

சத்திரசிகிச்சையைப் பார்க்க வந்த மாணவர்கள் அடுத்த அறைக்குச் சென்றனர். அவர்கள் ஒரு ரி.வி. திரையின் முன் அமர்ந்து சிகிச்சையை விபரமாகப் பார்ப்பார்கள். சத்திரசிகிச்சையின் போது ஒரு விரிவுரை நடைபெறும். மாணவர்கள் டொக்ரரையே பார்த்துக் கொண்டிருக்கத் தேவையில்லை.

டொக்ரர் நீண்ட, கூரிய பென்சில் போன்ற ஒரு கருவியை எடுத்தார். அதன் தட்டையான அடிப்பாகத்திலிருந்து ஒரு வயர் டொக்ரரின் தோள் மேலால் ஓடிக்கொண்டிருந்தது.

என் கண்கள் இவற்றைப் பார்த்திராவிட்டால், ஒரு அறிவியல் அறிஞனோ, ஒரு அறிவியல் கற்பனை எழுத்தாளனோ இந்த அதிசயத்தை நம்பவைக்க முடியாது. டொக்ரர், பென்சிலால் நோயாளியின் தோலில் மெதுவாகக் கோடிட்டார். வெட்டுவாய் தெரிந்தது. ஆனால் ஒரு துளி இரத்தம் வரவில்லை. டொக்ரர் பயன் படுத்திய அல்ராசொனிக், கத்தியின்றி, இரத்தமின்றி சத்திர சிகிச்சை செய்ய உதவியது. மின்கதிர் இயக்க 'பென்சில்' தோலை வெட்டுவதுடன் இரத்தத்தை உறைய வைக்கவும் செய்கிறது. காயத்திலிருக்கும் கிருமிகளையும் உடனேயே கொன்றுவிடுகின்றது.

நோவில்லாமல், இரத்தம் தோன்றாமல், சத்திரசிகிச்சை மேற்கொண்ட டொக்ரரின் கையிலிருந்த மின்னியல் கருவியை ஆச்சரியத்துடன் பார்த்து நின்றேன்.

வயிற்றின் உட்சுவரில் தொங்கும் ஆணியை எடுப்பதற்கு, வயிற்றை வெட்டித் திறப்பார்கள் என எண்ணினேன். சாதாரண சத்திரசிகிச்சையில் பயன்படுத்தும் ஊசியும் பட்டுநூலும் அங்கே இல்லை. எல்லாம் வேறு விதமாக இருந்தன.

"க்ளூ..." என்றார் டொக்ரர்.

வயிற்றில் வெட்டிய இரு பக்கங்களும் சேர்த்து இணைக்கப்பட்டன. காளான் போன்ற ஒரு பொருள் அதன் கீழ் வைக்கப்பட்டது. வெட்டின் மேல், ஒட்டும் தன்மைய, மெதுமையான செலுலாயிட் போடப்பட்டது. அதன் மேல் - க்ளூ - பசை இடப்பட்டது.

"ஆனால் இந்த ஒட்டுமட்டும் முழுமையான புண் ஆற்றும் சிகிச்சை அல்ல. எங்களிடம் ஒரு வகை உலோக நூல் உண்டு. இரத்தமும் ∴பைபரும் சேர்ந்த ஒரு நூல். இவை மனித உறுப்புக்களுடன் இணையக்கூடியவை. விரைவில் புண்களை ஆற்றக் கூடியவை. பின்னர் தாமாகவே கரைந்து மறைந்துவிடுவன. வெட்டிய மறு தெரியாது.

தூருப் பிடிக்காத உருக்கு ஆணி ஒன்றை உடைந்த கை எலும்பில் செலுத்தலாம். முறிந்த எலும்பு இணைந்து விரைவில் குணமாகும். ஒரு எக்ஸ்ரே இயந்திரத்தினால் மட்டும் எலும்பில் உள்ள அந்நிய சடப்பொருளை - உருக்கு ஆணியை - படம் பிடித்துக் காட்டமுடியும். ஆனால் இந்த ஆணி - ∴பைபர் அல்லது இரத்தத்தால் உருவாக்கப்பட்டதாயிருப்பதால் - எலும்பு பூரணமாக இணைந்தபின் (ஆறு மாத காலத்தில்) மறைந்துவிடும்; மறு ஒன்றும் வைக்காமலே" என்றார் டொக்ரர்.

நான் சென்றபோது அறையில் ஒரு நோயாளியே காணப்பட்டார். அவர் நன்றாகக் கவனிக்கப்பட்டார்.

"நஞ்சூட்டப்பட்ட, ஆபத்தான 'கேஸ்' " என்றார் பேராசிரியர். தொடர்ந்து, "செயற்கைக் குண்டிக்காய் இல்லையென்றால் அவர் இறந்திருப்பார். கவலைக்குரிய விடயம் என்னவென்றால் இந்த கிட்னீஸ் சற்றுப் பெரியது" என்றார்.

கண்ணாடி மேசை ஒன்று நோயாளியின் அருகில் இருந்தது. பல மென்மையான குழாய்கள் நோயாளியுடன் இணைக்கப்பட்டிருந்தன. நோயாளியின் இரத்தம் ரசாயன வழி ஊடாக ஓடிக் கொண்டிருந்தது. மூத்திரப் பைகள் அகற்றப்பட்டு, இரத்தத்துடன் சிறப்பு நெகிழ்வுப் பொருட்கள் சேர்க்கப்பட்டிருந்தன. நோயாளிக்கு தன் சொந்த குண்டிக்காய் இயங்கவில்லை என்ற உண்மை தெரியாது.

"இந்த வகையால், உயிராபத்தான கிட்னி நோயை மாற்ற முடியும். தன் சொந்த மூத்திரத்தினால் நஞ்சூட்டப்பட்ட ஒருவரை சாவிலிருந்து காப்பாற்ற முடியும். இறந்த ஒருவரின் கிட்னி மாற்றுச் சிகிச்சை மூலமும் இது சாத்தியம்" என்றார் பேராசிரியர்.

"சரி... வாருங்கள்... ஒரு செயற்கை இருதயத்தைப் பார்க்கலாம்... இதோ..." என்றார். ஒரு திறந்த அறையைக் காட்டினார். உள்ளே ஒரு கபினற் இருந்தது. அது இயங்கிக் கொண்டிருந்தது. தன்னியக்க மின்கருவிகள் நிமிடத்திற்கு மூன்று லீற்றர் குருதிச் சுற்றை செயற்படுத்தின. துடிப்பு 80தையும் அமுக்கம் 120தையும் காட்டின. உறுப்பின் அமுக்கம் வீழ்ச்சியடைய தன்னியக்கக் கருவிகள் அதிக இரத்தத்தைச் செலுத்தின.

அடுத்த அறையிலிருந்த ஒரு டொக்ரரின் குரல் என் சிந்தனையைக் கலைத்தது.

"நேர்ஸ்... தயவு செய்து இருதயத்தை நிறுத்து... இரத்தப் பெருக்கு என் வேலைக்குத் தடையாக..."

அன்று, மனிதனின் உயிராக இருந்த இருதயத் தன் இயக்கத்தை நிறுத்த முயலும் போது, டொக்ரர்கள் அது நின்று விடாமல் பார்க்கத் தம்மால் இயன்றவரை முயன்றார்கள். அந்த அரிய பட்டறிவை எண்ணிப் பார்க்கிறேன். இங்கே, டொக்ரர், அமைதியாக இருதயத்திலிருந்து பீறிய இரத்தத்தைக் கட்டுப்படுத்தி விட்டு, சத்திரசிகிச்சையை ஆரம்பித்தார். தொடர்புகள் விலக்கப் பட்ட இருதயம் அசையவில்லை. ஆனால் அதை இயக்க கண்ணாடிப் பெட்டியில் செயற்கை இருதயம் ஒழுங்காக இயங்கி இரத்தத்தை செலுத்துகிறது.

துடிக்கும் இருதயத்தில் ஒரு காயத்தை ஊசியினால் தைப்பது எவ்வளவு கடினம்! சத்திரசிகிச்சை முடிவடையும் நேரம் டொக்ரர் கை சோர்ந்து களைத்துவிட்டார். இரத்த நாளங்களை இயக்க தன்னியக்கப் பொறிகள் பெரிதும் உதவின. டொக்ரர் பொறியைப் பற்றி, இரத்த நாளங்களை அதில் வைத்தார். 'கிளிக்' என்ற ஒலியுடன் அவை பொருத்தப்பட்டன. மற்றொரு பொறி

இருதயத்தின் அருகே வைக்கப்பட்டது. அது வெட்டுக் கோடுகளை ஒன்று சேர்த்தது.

டொக்ரர் சொன்னார்:

"தயவு செய்து இருதயத்தை இயக்கிவிடுங்கள்."

(திசை - 1989)

(நன்றி: 1960களில் ரஸ்ய அறிவியல் கழகம் வெளியிட்ட "Reports from the Twenty first Century")

அன்பான நரியாரே!

ஒரு கிராமத்து விதானையார் வீட்டில் ஆறு அழகிய கோழி களும் ஒரு கம்பீரமான சேவலும் வளர்ந்து வந்தன.

சேவல் அதிகாலையில் கண்விழித்து பலத்த சத்தமாகக் கூவும். அவ்வீட்டில் எல்லோரும் எழுந்து தங்கள் கடமைக்குச் செல்வார்கள்.

ஆறு கோழிகளும் சேவலும் இணைபிரியாது அயல் வயல் களிலும் காட்டிலும் போய் மேய்ந்துவரும்.

காட்டில் இருந்த நரி ஒன்று இக்கோழிகளைக் கண்டது. ஒன்றைப் பிடித்து தின்னவேண்டும் என்று தருணம் பார்த்திருந்தது. உண்மையில் , கோழிகளை அல்ல, அந்தப் பெரிய சேவலையே ருசி பார்க்க வேண்டுமென்று விரும்பியது அது.

வயலில் மேய்ந்து கொண்டிருந்த கோழிகள் ஒருநாள் சேவலை விட்டுவிலகி வெகுதூரம் போய்விட்டன. அவ்வேளை தற் செயலாக அங்கே வந்த நரி கோழிகளைப் பார்த்தது. சேவலைக் காணாது தேடியது.

தனியாக தூரத்தே நின்ற சேவல் தன்னை நோக்கும் நரியைப் பார்த்து திடுக்கிட்டது. என்றாலும் பயம் காட்டிக் கொள்ளாமல் 'டக்' கென்று ஒரு மரக்கிளையில் பாய்ந்து இருந்து கொண்டது.

நரி சேவலைப் பார்த்து -

"அன்பான சேவலே! நீ கண்களை மூடிக்கொண்டு பாடும் போது எவ்வளவு அழகாய் இருக்கிறாய். நீ ஒரு நல்ல நண்பனைப் போல... என்னோடு வருகிறாயா? என் வீட்டில் உனக்கு ஒரு விருந்து வைக்க விரும்புகிறேன்..." என்றது.

"தெரியும்... தெரியும்... எல்லாரும்தான் சொல்கிறார்கள், நான் மற்றைய சேவல்களைவிட நன்றாகப் பாடுவேன் என்று... ஆனால் நான் கண்களை மூடிக்கொண்டு அழகாகப் பாடுவேன் என்று சொன்னது நீ ஒருவன்தான்" என்றது சேவல், மிடுக்குடன்.

"நான் சொல்வதை நீ நம்பவில்லை என்றால் உன் கண்களை மூடிக்கொண்டு நீ அதிகமாய் விரும்பும் ஒரு பாடலைப் பாடிப்பார். அப்போது உண்மையை உணர்வாய்." என்றது நரி.

நரியின் புகழ்ந்துரையில் மயங்கிய சேவல் கண்மூடி கூவத் தொடங்கியது.

நரி பாய்ந்து சேவலின் கழுத்தைக் கௌவிக்கொண்டு ஓடியது.

சேவல் உதவிக்கு கூவிற்று. கூட வந்த கோழிகளை கூவி அழைத்தது. வீட்டுக்காரரை அழைத்தது. யாரும் உதவிக்கு வரவில்லை.

நரி சேவலைத் தூக்கிக் கொண்டு நடுக்காட்டுக்கு ஓடிற்று.

அயல் வயல்களில் வேலை செய்துவிட்டு அவ்வழியே வந்துகொண்டிருந்த கிராமத்தவர்களின் செவிகளில் அவலக்குரல் விழுந்தது. அவர்கள் கையில் அகப்பட்ட கற்களை எடுத்து நரியை துரத்திக்கொண்டு ஓடினார்கள்.

நரி வேகமாக ஓடியது.

அவர்களும் விட்டுவிடவில்லை.

அதேவேளை சேவல் சொன்னது -

"அன்பான நரியாரே! விரைந்து ஓடும். இல்லையேல் அவர்கள் உன்னைக் கொன்றுவிடுவார்கள்."

"சே... அவர்கள் என்னைப் பிடிப்பதாவது. உனக்குத் தெரியுமா... இந்தக் காட்டில் விரைவாக ஓடக்கூடியவன் நான் ஒருவன் தான்..." என்றது நரி.

நரியின் வாயிலிருந்து நழுவிய சேவல் உடனே பாய்ந்து அருகில் நின்ற மரக்கிளையில் ஏறிக்கொண்டது.

தன்னை ஏமாற்றிய சேவலைப் பார்த்து நரி திரும்பவும் சொன்னது -

"நண்பனே! என் வீட்டுக்கு வா. உனக்கு விருந்து தர என் மனைவியும் குழந்தைகளும் காத்துக்கொண்டிருப்பார்கள். இறங்கி என்னுடன் வா. நாங்கள் இனிமையான ஒரு விருந்து உண்போம்."

"ஓ... வேண்டாம்... இனிமேலும், என்னை மடையன் என்று எண்ணாதே! இப்போது என் கண்களைத் திறந்தபடியே

என்னால் பாடமுடியும்" என்று கூறிவிட்டுப் பலத்த சத்தமிட்டுக் கூவியது சேவல்.

அச்சத்தம் கேட்டு கிராமத்தவர்கள் ஓடிவந்து தன்னை அடித்துக் கொன்றுவிடுவார்கள் என்றுணர்ந்த நரி நடுக்காட்டுக்குள் ஓடி மறைந்தது.

(மாலை முரசு - 1987)

- சிங்களக் கிராமியக்கதை -

சப்பாத்துப் பிழை

சில ஆண்டுகளுக்கு முன்.

சீனாவில், உச்ச நீதிமன்ற நீதிபதி ஒருவர் தன் பணிமனை நோக்கிப் போய்கொண்டிருந்தபோது தன்னுடைய கால் ஒன்று நொண்டுவதை உணர்ந்தார்.

அவர் முடவன் அல்ல.

அப்படியென்றால் அவர் ஏன் நொண்ட வேண்டும்!

அவர் குனிந்து தன் பாதங்களைப் பார்த்தார்.

அப்பொழுதுதான் உண்மை புரிந்தது.

இரு சப்பாத்துக்களும் வெவ்வேறாய் இருந்தன. ஒன்று உயர்ந்த குதியுடனான சிவப்புநிறச் சப்பாத்து. மற்றது தட்டையான பச்சை வண்ணச் சப்பாத்து.

உடனே அவர் தன் உதவியாளனைப் பார்த்து "வீட்டுக்கு ஓடிப்போய், சரியான சப்பாத்தை எடுத்துவா" எனப் பணித்தார்.

அவன் விரைந்தோடிப்போய், சில நிமிடங்களில் திரும்பி வந்தான், வெறுங்கையுடன்.

நீதிபதி அவனைக் கோபத்துடன் பார்த்தார்.

அவன், கவலையுடன் சொன்னான்:

"உங்களுடைய சப்பாத்தை மாற்றுவதில் பயனில்லை. வீட்டிலிருக்கும் ஒரு சோடியும் இவற்றைப் போலவே வெவ்வேறு வண்ணத்தில் உள்ளன.

(சமுரசு - 1984)
-சீன நாடோடிக்கதை-

தும்பிக்கு

ஆசிரியர் எழிலரசன் எட்டு மைல்கள் சைக்கிள் ஓடி வந்து மணிக்குப் பாடசாலை வந்து சேர்ந்தபோது, பாடம் தொடங்கிப் பதினைந்து நிமிடங்களாய்விட்டன.

அவருக்கு முதல் பாடம் மூன்றாம் வகுப்பில் கணிதம்.

ஓட்டமும் நடையுமாக வகுப்பில் நுழைந்த எழிலரசன், களைப்பு நீங்க, இரு நிமிடங்கள் கதிரையில் அமர்ந்தார்.

"பிள்ளைகளே! இந்தக் கணக்கைச் செய்யுங்கள்..." என்று சொல்லிக்கொண்டு, எழுந்து போய் கரும்பலகையில் எழுதினார்.

ஒரு கொத்து அரிசி 5 ரூபா 50 சதமென்றால் பத்தரைக் கொத்து அரிசியின் விலை என்ன?

கணக்கை வாசித்த செழியன் என்ற மாணவன் எழுந்து "சேர்..." என்றான்.

அவன் படிப்பில் கெட்டிக்காரன்; குழப்படியிலும்கூட.

"என்னடா...!" என்று கேட்டு, திரும்பினார் ஆசிரியர்.

"இப்ப ஒரு கொத்து அரிசி ஐஞ்சு ரூபா ஐம்பது சதமா சேர்...?"

"ஏன் இங்கே என்ன விலை...?"

"இஞ்ச ஆறு ரூபா ஐம்பது சதம் சேர்..."

எழிலரசன் திரும்பிக் கரும்பலகையில் கணக்கைத் திருத்தினார்.

ஒரு கொத்து அரிசி 6 ரூபா 50 சதமானால் பத்தேமுக்கால் கொத்து அரிசியின் விலை என்ன?

"சரி... இதைச் செய்யுங்கோ..."

"சுகமான கணக்கை, நீ பெரிசாக்கிப் போட்டாயேடா?" என்று சொல்வது போல, சக மாணவர்கள் செழியனைச் சினந்து பார்த்தனர்.

அமைதியை நாடி "அப்பாடா..." என்று கதிரையில் அமர்ந்த எழிலரசன் மனதில் பலப்பல எண்ணங்கள் எழலாயின.

அரிசிவிலை...

செலவுக்குப் போதாத சம்பளம்...

வீட்டுக்கு அருகில், வழியில் பள்ளிக்கூடம் பல இருக்கத் தினமும், எட்டும் எட்டும் பதினாறு மைல் சைக்கிள் ஓடவேண்டிய நிர்ப்பந்தம்...

காலையில், அவருடைய மூன்று வயதுக் குழந்தை "அப்பா... வரேக்கை பிஸ்கட் வாங்கி வாங்கோ..." என மழலை மொழிந்தபோது, அவருடைய இல்லத்தரசி, "காசில்லாட்டா பள்ளிக்கூட பிஸ்கட்ல எடுத்து வாங்கோ..." என்றதும்-

"அது முறையல்ல... என்று மனைவிக்கு சுருக்கமாக விளக்கிவிட்டுச் சைக்கிள் ஏறியது...

வழியில் சைக்கிள் ரயல் பங்சர் ஆகி, கைதடி சந்தியில் கடையில் ஒட்டுவித்துக்கொண்டு, 'அவுக்கவுக்' என்று இளைக்க இளைக்க சைக்கிளை மிதித்தது...

நேரம் அவருக்காக காத்திருக்கவில்லை.

பாடவேளை முழிந்ததை அறிவிக்க மணி அடித்தது கேட்டு எண்ணக் குவியலிலிருந்து வெளியே வந்த எழிலரசன், "சரி கணக்கை நாளைக்குக் காட்டுங்கோ" என்று சொல்லியபடி எழுந்து போய்விட்டார்.

எழிலரசனுக்கு அன்று பின்னேரமும் அதே வகுப்பில் ஒரு பாடம் - ஆங்கிலம் - இருந்தது. ஆசிரியரின் வருகையைக் கண்டு அமைதியாய் இருந்தனர் மாணவர்.

வகுப்பில் நுழைந்த எழிலரசன், "செழியன் உன்னுடைய ஆங்கிலப் புத்தகத்தைக் கொண்டுவா" என்றார்.

"முன்வரிசையில் இருக்கும் மாணவரிடம் புத்தகம் பெற்றுப் படிப்பிக்கும் வழக்கத்தைவிட்டு, இன்று மூன்றாம் வரிசையில் இருக்கும் செழியனிடம் கேட்கிறாரே! காலமை அறிசிவிலை சொன்னானே இவன்... இவனிலை மாஸ்ரருக்குக் கோபம்" பின் வரிசையில் இருந்த மாணவன் ஒருவன் சக மாணவனிடம் கிசுகிசுத்தான்.

செழியன் புத்தகத்தை எடுத்துக்கொண்டு எழுந்து தன் காற்சட்டைப் பொக்கற்றிலிருந்து எதையோ எடுத்து தன் டெஸ்கினுள் வைத்தான்.

அதைக் கவனித்த எழிலரசன் "அதென்னடா,

மாங்காயா...?" என்று கேட்டுக்கொண்டே மேசையில் இருந்த பிரம்புத்தடியை எடுத்தார்.

தயங்கித் தயங்கி, ஆசிரியரின் முன் வந்த செழியன் புத்தகத்தை நீட்டினான். அதே நேரம் செழியனின் டெஸ்க்கை மெல்லத் திறந்து பார்த்த அயல் மாணவன் "அது பிஸ்கட் சேர்..." என்றான்.

செழியனின் கண்கள் கலங்கின.

எழிலரசன் பிரம்பை மேசையில் வைத்தார். அவன் முதுகைப் பரிவுடன் தடவி "ஏன் நீ அதைத் தின்னவில்லை...?" என்று கேட்டார்.

"அது என்ர தம்பிக்கு..."

"தம்பிக்கா? அப்ப... நீ என்ன தின்றாய்...?"

"ஒண்டுமில்லை சேர்..."

"ஏன்... பசிக்கவில்லையா...?"

"ஒவ்வொரு நாளும் தம்பிக்கு பிஸ்கட் கொண்டுபோய்க் கொடுப்பேன்... இதை நான் திண்டால் தம்பி பிஸ்கட் கேட்டு அழுவான் சேர்..."

"உன்னுடைய தம்பிக்கு எத்தனை வயது...?"

"மூன்று வயசு சேர்..."

"மூன்று வயசா...?"

எழிலரசனின் கண்கள் கலங்கின; மறுபக்கம் திரும்பி சால்வைத் தலைப்பை எடுத்து கண்களை துடைத்துக்கொண்டு சொன்னார்:

"செழியன் நீ போ ராசா... போய் இரு..."

(தமிழ்நாடு வாரமலர் - 1973)

"அறிவுக் களஞ்சியம்"
மாத இதழில் தொடராக வெளிவந்த
இயந்திர நண்டுகள்.

சோவியத் விஞ்ஞானக் கற்பனை
இலக்கிய எழுத்தாளர்
அனத்தோவிய் தி னெப்ரோவ் எழுதிய
இயந்திர நண்டுகள்.

உருவாக்கியவரின் உயிரைப் பறித்த
இயந்திர நண்டுகள் பற்றிய சுவையான கற்பனை.

"அறிவுக் களஞ்சியம்" இதழில் வெளிவந்த போது
படித்துப் பாராட்டிய வாசகர்களில் சிலர்:

- இயந்திர நண்டுகள் விறுவிறுப்பாக உள்ளது.
அடுத்த இதழை மிக ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.
- சி. நவசோதி, சாவகச்சேரி

- இயந்திர நண்டுகள் தொடர் மிகவும் விறுவிறுப்பாகப் போகிறது.
- செ. இந்திரமோகன், யாழ். யூனியன் கல்லூரி

- இயந்திர நண்டுகள் முதல்பகுதியே விறுவிறுப்பாக இருக்கிறது.
- தில்லைநாதன் கோபிநாத், யாழ். இந்துக் கல்லூரி

- எஸ்.பி.கே. அவர்கள் எழுதும் இயந்திர நண்டுகள் விஞ்ஞானக் கற்பனைக் கதை மிகவும் சுவையாக உள்ளது.
- கு. தனேஸ்வரன், செங்குந்தா இந்துக் கல்லூரி

- இயந்திர நண்டுகள் தொடர்கதை மிகவும் நன்று
- மா. மணிகண்டன், கொக்குவில் இந்துக் கல்லூரி.

Cover Printed: Guru Printers, 56, Adiyapatham Road, Thirunelvely.